கன்னிவாடி

நரசிங்கப்ப நாயக்கன்

வளமடல்

பதிப்பாசிரியர்

புலவர். க. கிருஷ்ணமூர்த்தி

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

- சென்னை - 113

கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்

புலவர் க. கிருட்டிண மூர்த்தி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Kannivāti Naracinkappa Nāyakkan Valamatal
Editior	:	Pulavar K. Krittinamurthi
Publication & Copyright	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, Tharamani, Madras-600 113.
Publication Number	:	228
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	December, 1995
Paper used	:	16 kg Creamwove
Size of the book	:	⅛ Demmy
Printing types used	:	10 Point
Number of copies printed	:	1000
Number of Pages	:	4 + 88
Price	:	Rs. 20/-
Binding	:	Paper Pack
Artist	:	Jegan
Subject	:	Folk ballad
Printer	:	Pavai Printers Pvt. Ltd., 142, Jani Jan Khan Road, Royapettah, Madras-600 014. Phone: 832441

வெள்ளி விழா வெளியீடு

டாக்டர் ச. சு. இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.

அணிந்துரை

தமிழுக்குத் தொண்டு செய்யும் பல்வேறு அமைப்புகளில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பங்கு கணிசமானது; உயர்வானதும் கூட. நிறுவனம் பல்வேறு துறைகளில் நுண்மாண் நுழைபுலத்தோடு ஆய்வுகளில் ஈடுபட்டுப் பல் வேறு நூல்களை வெளியிட்டுத் தமிழுக்குப் பெருமை சேர்த்து வருகிறது.

குறிப்பாக இந்நிறுவனத்தின் தொன்மைவாய்ந்த ஆயிரக் கணக்கான ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்து வரும் இலக் கியத்துறையின் ஓர் அங்கமாகத் திகழும் சுவடியியல் துறை யின் செயல்பாடு பாராட்டத்தக்க ஒன்று. இத்துறையின் வழி அச்சில் வெளிவராத அழியும் நிலையிலுள்ள பல சுவடிகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இவ்வாறாகத் தமிழுக்குத் தொண்டு ஆற்றிவரும் இவ் வேளையில் சுவடிகளில் புதைந்துள்ள மாணிக்கங்களைத் தமிழன்னையின் முடியில் பதித்து அழகு பார்க்கும் முக மாகவும் ‘எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண் டும்’ என்ற பாரதிதாசன் கோட்பாட்டிற்கு இணங்கவும் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பு இடத்தினைப் பெற் றுள்ள சிற்றிலக்கிய வரிசையில் ‘கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்’ என்னும் பிரபந்தம் அச்சேறுகிறது.

தொல்காப்பியம் அகப்பொருளில் ஒருதுறையாகப் பொதிந்திருந்தது ‘மடல்’ இலக்கியம். சங்கத் தொகை நூல் களில் கலித்தொகையின் நெய்தல் பாடல்கள் சில மட லூரும் தலைவனைப் பற்றிக் கூறுகின்றன (கலி. 138-139, 140, 141). திருக்குறளும் நாணுத்துறவுரைத்தல் என்னும்

அதிகாரத்தின் வாயிலாக மடலேறுதல் பற்றிப் பேசுகிறது. பக்தி இலக்கியம் ஒரு மாறுபட்ட நோக்கோடு பார்க்கிறது. 'கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்' என்ற இந் நூல் முன்னோர் வழியேசென்று தமிழுக்கு அணி செய் கிறது.

கன்னிவாடி பாளையப்பட்டின் இயற்கை வளம், நர சிங்கப்ப நாயக்கனின் மறம், காமச்சுவையூட்டும் கடவுளர் பற்றிய புராணச் செய்திகள், மருத்துவக் குறிப்புகள், பலவகை நோய்களின் பெயர்கள், பரத்தையர் மற்றும் பேய் பற்றிய செய்திகள் இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுச் செவி நுகர் கனிகளாக விளங்குகின்றன.

இச்சுவடியை மிகவும் சிறப்பாகப் பதிப்பித்த புலவர் க. கிருட்டிணமூர்த்தி பாராட்டுக்குரியவர்.

தமிழ் வளர்ச்சித் துறையின் நிதி உதவி பெற்று வெளி வரும் நூல்களுள் இதுவும் ஒன்று.

நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரு கின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்றும் எங்கள் நன்றிக்குரியவர்.

எங்கள் நிறுவனத்தின்பால் பேரன்புகொண்டு, தாய்மை யோடு அரவணைக்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. இரா. கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப. அவர்களையும், இச்சுவடி வெளியீட்டுக்கு நிதிஉதவி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் பொறுப்பு க. பன்னீர்செல்வம் அவர்களையும் இவ்வேளையில் நெஞ் சார்ந்த நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

மெய்ப்புத் திருத்தம் செய்த பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு எங்கள் நன்றி.

இந்நூலைக் குறித்த காலத்தில் சிறந்த முறையில் அச்சிட் டுத் தந்த பாவை பிரிண்டர்ஸ்-க்கும் நன்றி.

இயக்குநர்

முன்னுரை

1. மடல் - ஒரு கண்ணோட்டம்

அமிழ்தினும் இனிய செந்தமிழ் சங்க காலத்திற்கு முன்னும், பின்னும் தோன்றிய இலக்கியங்கள் பல. அவற்றில் நமக்குக் கிடைத்தவை சில. இயற்கையின் கொடுமைக்கும், சீற்றத்திற்கும் பலியானவை பல. கிடைத்த சில சங்க இலக்கியங்களிலும் பெரும்பகுதிப் பாடல்கள் அகத்துறையைச் சார்ந்தனவாகவே இருக்கின்றன. இதிலிருந்து மக்கள் அகவாழ்வில் பண்பாட்டுடன் சிறப்புற்று வாழ்ந்திருந்தனர் என்று தெரிகிறது.

தமிழ் மொழியில் பலவகைச் சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. அவை தாம் பாடப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் அகம், புறம் பற்றிய வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுகின்ற ஆடி போற் திகழ்கின்றன. அவற்றுள் கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, தூது, கோவை, மடல் ஆகியவை குறிப்பிடத்தக்க சிற்றிலக்கியங்களாகும்.

தமிழ் இலக்கிய உலகில் அந்தந்தக் காலகட்டத்திற்கு ஏற்ப இலக்கிய வகைகள் தோன்றிச் செழிப்புற்றன; சில வீழ்ந்துபட்டன. வாழுகின்ற மக்கட் சமுதாயத்தைப் பற்றி அந்த மக்களுக்காக ஏதேனும் ஒரு செய்தியை உள்ளடக்கித் தோன்றும் இலக்கியங்கள் காலத்தைக் கடந்தும் நிலைத்து நிற்கும் தகுதியைப் பெறுகின்றன.

சிற்றிலக்கியங்கள்

சங்க கால முதல் உருப்பெற்று, காலப் போக்கில் சிற்றிலக்கியங்கள் சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று இன்று முழுநிலையை எய்தியுள்ளன என்று கூறலாம். குறிப்பாக, 16-ஆம் நூற்றாண்டில் நாயக்கர் ஆட்சியின் தொடக்க காலம் முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலங்களில் சிற்றிலக்கியங்கள் உன்னத நிலையில் இருந்தன என்றுதெரிகிறது.

சிற்றிலக்கியங்கள் என்ற சொல் அண்மைக் காலத்தில்தான் வழக்கிற்கு வந்துள்ளதாகத் தெரிகிறது. இச்சொல் வழக்கிற்கு வருவதற்கு முன்னர் பிரபந்தம் என்ற வடசொல்லால் தான் சிற்றிலக்கியங்கள் வழங்கப்பட்டன என்றும், பிரபந்தம் என்ற சொல்லாட்சி கி.பி. 12-ஆம் நூற்றாண்டில்தான் அடியார்க்கு நல்லார் உரையில் ஆளப்பட்டுள்ளது 1 என்றும் டாக்டர் ந.வீ. செயராமன் தெளிவுபடுத்துகிறார்.

சிற்றிலக்கியங்களின் வகைகள்

சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கையைப் பாட்டியல் நூல்கள் பலவேறு எண்ணிக்கையளவாகக் கூறுகின்றன.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் எழுந்த சிவந்த பல்லவன் உலாவில் தான் முதன் முதலாக,

-'தொண்ணூற்றாறு

கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்'[2]

என்று சுட்டப் பட்டிருக்கிறது.

'பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாத்

தெண்ணூற் றாறெனுந் தொகையதாம்'[3]

எனப் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியலும் கூறுகிறது. 'சைவ தத்துவம் 96 என்பது போலப் பிரபந்தம் 96 என்னும் வழக்கும் எப்படியோ புகுந்து விட்டது.[4] என்று திரு.மு.சண்முகம் பிள்ளையவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்.

கி.பி. 19-அம் நூற்றாண்டைச் சார்ந்த பிரபந்த தீபிகையில்,

'பதினாறை யாறிற் பெருக்கிப் பிரபந்தாதி

பலவகை எடுத்துரைக்கின்'[5]

என்று வருகின்ற தொடர் சிற்றிலக்கிய வகைகளின் தொகையைத் தெளிவு படுத்துவதாக உள்ளது.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான வீரமா முனிவரால் தொகுக்கப்பட்ட சதுரகராதியில் சிற்றிலக்கியங்கள் 96 வகைகள்[6] என்றே குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

பிரபந்த மரபியலும் 96 எனச் சுட்டுகிறது. மற்ற பாட்டியல் நூல்கள் எண்ணிக்கையைக் குறைத்தே சுட்டுகின்றன.

மடல் இலக்கியங்கள்

சங்க அக இலக்கியங்களில் ஒரு சில பாடல்களில் இடம் பெற்ற மடல், பிற்காலத்தில் தனி அகப் பொருள் துறையாகவே குறிக்கப் பெற்றது. பின்னர் கலம்பக இலக்கியங்களில் தழை என்னும் உறுப்பின் பகுதியாக விளங்கி, கோவை இலக்கியத்தில் முழு துறையாக வளர்ச்சியடைந்தது. கி.பி.9-அம் நூற்றாண்டில் பக்தி இலக்கியத் தோற்றக் காலத்தில் 'மடல்' ஒரு தனி இலக்கியமாக மலர்ந்தது.

'வைணவ சமயத்தைச் சார்ந்த திருமங்கையாழ்வார், தன்னைத் தலைவி யாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு பாடிய பாடல் மடல் இலக்கிய அமைப்பில் அமைந்தது எனலாம். இவர் பாடிய சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய இரண்டு மடல் இலக்கியங்களுமே முதலில் தோன்றிய மடல் இலக்கியங்கள் என்னும் பெருமையைப் பெறுகின்றன. இவ்விரண்டு மடல் இலக்கியங்களிலும் தலைவி மடலேறுவதாக அமைந்திருக்கின்றது.

முதலில் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இடைக்காலத்தில் பாடப் பெற்ற மடல் இலக்கியம், கி.பி.15-ஆம் நூற்றாண்டு முதல் அரசர்களையும், சமீன்தார்களையும், வள்ளல்களையும் பாடிப் பொருள் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டதாக மாறிய நிலையையும் இலக்கிய வரலாறுகள் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த நிலை இருந்தது என்பதை,

'சென்ற நூற்றாண்டிலும் பழமையான உலா, மடல், அந்தாதி முதலிய செய்யுட்களைப் பாடிச் செல்வர்களைப் புகழ்ந்து, பொருள் பெற்று வாழ்வதில் புலவர் சிலர் காலம் கழித்தனர்'[7] என்ற மு. அருணாசலம் அவர்களின் கூற்று உறுதிப்படுத்துவதாக உள்ளது.

தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் பெரும்பான்மையானவற்றில் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான மடல் பற்றிய செய்திகள் இடம் பெறவில்லை என்றே தெரிகிறது.

மடல் - சொல்லும் பொருளும்

மடல் என்னும் சொல் - பனை முதலியவற்றின் ஏடு, என்ற பொருளில், 'கொழுமடற் குமரி வாழை'[8] எனச் சீவக சிந்தாமணியிலும், 'வாழைக் கொடு மடல் ஈன்ற கூர்வாய்க் குவிமுகை'[9] என நற்றிணையிலும் காணப்படுகின்றது.

பனங்கருக்கு என்ற பொருளில், 'ஒழிமடல் விறகிற் கழி மீன் சுட்டு'[10] எனவும் பனங்கருக்காற் குதிரைபோல் செய்த ஊர்தி என்ற பொருளில் 'ஏறிய மடற்றிறம்'[11] எனவும், பூவிதழ் என்ற பொருளில் 'மடல்விரி மலர்'[12] 'மடற்றாழை மலர் மலைந்தும்'[13] எனவும் கிளை என்ற பொருளில், 'மடற் பெரிய வாலின் கீழ்'[14] எனவும் பல பொருள்களில் வழங்குவதைக் காணலாம்.

'பூவினிதழும் பனையிதழ் போல்பவும்
வாய்பா டுரைக்கின் மடலென் கிளவி'[15]

என 9-ஆம் நூற்றாண்டினதாகிய சேந்தன் திவாகரம் மடல் என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருகிறது.

மடல் என்ற சொல்லாட்சியைத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் வழங்கி வந்திருப்பதைக் காண முடிகிறது.

மடல் ஏற்றமும் மடற் கூற்றும்

பனை மடல்களால் செய்யப்பட்ட குதிரை மீதேறி தான் விரும்பிய பெண்ணின் உருவந் தீட்டப் பெற்ற கிழியைக் கையிலேந்தி ஊரறிய வலம் வந்து, தலைமகளின் பெயரைச் சொல்லிப் புலம்பும் நிலையே மடல் ஏற்றம் எனப்பட்டது. இவ்வாறு மடலேறித் துன்புறுவதைக் கூறாமல் தலைவன் மடலேற முயல்வதாகக் கூறுவது மடற்கூற்று எனப்பட்டது.

தொல்காப்பியத்தில் மடல்

தமிழ் மொழியில் நமக்குக் கிடைத்த முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் மடலுக்குரிய இலக்கணம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மடலேற்றம் பெருந்திணைக்கும்,மடற் கூற்று அன்பின் ஐந்திணைக்கும் உரியனவாகக் காட்டுவார் தொல்காப்பியர்.

'ஏறிய்மடற் றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே'[16]

என்னும் நூற்பாவில் மடலேறுதல் பெருந்திணைக்கு உரியது என்பதைத் தொல்காப்பியர் புலப்படுகிறார். இதனால் மடலேறுதல் என்பது இழிந்த செயலாக அக்காலச் சமுதாயத்தில் கருதினர் என்பது தெரிகிறது.

'மடன்மாக் கூறும் இடனுமா ருண்டே'[17]

என்பதனால் மடலேறுதல் உலகியல் வழக்கிலும் நிலவி வந்தமையை உணர முடிகிறது.

தலைவன் தலைவியை அடைய மடல் எறுவேன் என்பது அன்பின் ஐந்திணையாகவும், மடல் எறி விடுவது பெருந்திணையாகவும் இலக்கிய மரபு நமக்குச் சுட்டுகிறது.

சங்க இலக்கியங்களில் மடல் ஏற்றம்-நற்றிணை

பாலை பாடிய பெருங்கடுங்கோ என்பது போலவும், குறிஞ்சி பாடிய கபிலர் என்பது போலவும் சங்க காலத்தில் அகப்பொருள் துறையான மடலேறுதல் குறித்து மிகச் சிறப்பாக இரண்டு பாடல்களைப் பாடிய காரணத்தால் மாதங்கீரனார் என்னும் சங்கப் புலவர், 'மடல் பாடிய மாதங்கீரனார்' என்றழைக்கப்படுகிறார். மடலேறுதல் பற்றி இப்புலவர்.

'மடல்மா ஊர்ந்து மாலை சூடிக்
கண்ணகன் வைப்பின் நாடும் ஊரும்
ஒண்ணுதல் அரிவை நலம்பா ராட்டி
பண்ணல் மேவல மாகி அரிதுற்று
அதுபிணி யாக விளியலம் கொல்லோ'[18]

எனச் சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் தன்னுள்ளே கூறியது என்னும் துறையிலமைத்துப் பாடியுள்ள பாடல் நோக்கத் தக்கது

குறுந்தொகையில் மடலேற்றம்

மடல் பாடிய மாதங்கீரனார் என்னும் சங்கப் புலவர் பாடியுள்ளதாகக் காணப்படும் குறுந்தொகைப் பாட்டில்,

'விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மரபிற் பூட்டி
வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
ஒருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ'[19]

என மடலேறுதல் குறித்த விளக்கம் அமைந்திருப்பது உணரத்தக்கதாயுள்ளது.

கலிதொகையில் மடல் ஏற்றம்

மடலேறுதல் உலகியல் வழக்காக இருந்த நிலையினைக் கலித்தொகைப் பாடல்கள் உணர்த்துகின்றன.

'வருந்தமா வூர்ந்து மறுகின்கண் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்'[20]

என்பதால் தலைவன் பணங்கருக்குக் குதிரை மீது ஏறி ஊர்ந்து சுற்றத் தினரிடமிருந்து தலைவியைப் பெற்ற நிலையினைத் தெளிவாக உணர முடிகிறது. இன்னொரு பாடலில்,

'கனவினாற் காணிய கண்படா வாயின்
நனவினான் ஞாயிறே காட்டாய்நீ யாயின்
பனையீன்ற மாவூர்ந் தவன்வரக் காமன்
கணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு'[21]

என்று ஞாயிற்றிடம் தலைவி கூறியது கொண்டும் மடலேறுதல் வழக்கில் இருந்தமையை அறியலாம்.

மடற்கூற்று : குறுந்தொகை

தன்னை வருத்தியவள் இன்ன தன்மையுள்ளவள் என்பதை ஊருக்கு உணர்த்து முகமாக மடலேறுபவனின் கூற்றாக,

– 'அரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகின்
நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா நாணுகஞ் சிறிதே'[22]

எனும் குறுந்தொகைப் பாடல் தெரிவிக்கிறது.

'மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங்கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே'[23]

'மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை ஆவிரை எருக்கொடு பிணித்தியாத்து
மல்லலூர் மறுகின்கண் இவட்பாடும் இஃதொத்தன்
எல்லீரும் கேட்டீமின் என்று'[24]

இவை தவிரக் குறிஞ்சிக்கலியின் 22-ஆம் பாடலிலும், நெய்தற்கலியின் 22, 23-ஆம் பாடல்களிலும் படலூர்தல் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

மடலேறுதல்

'காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரையைப் போல் ஓர் உருவம் அமைத்து அதன் கழுத்தில் மணி, மாலை முதலியவற்றைப் பூட்டித் தன் உருவத்தையும், தலைவியின் உருவத்தையும் ஒரு படத்தில் எழுதிக் கையிலேந்தி, அதன்மேல் யாவரும் அறிய ஊர்ந்து வருதலை மடலேறுதல் என்பர். அங்ஙனம் அவன் வருவதைக் கண்ட ஊரினர் பட முதலியவற்றால் 'இன்னவளுக்கும் இவனுக்கும் நட்பு உண்டு' என்பதை அறிந்து அதனை வெளிப்படக் கூறிப் பழிப்பர். அது கேட்டுத் தமர், மணம் புரிவிப்பர்.' 'மடலேறும் தலைவன் நீறு, எருக்க மாலை, ஆவிரம் பூமாலை முதலிய வற்றை அணிந்து வருதல் வழக்கமென்பது தெரிகின்றது'[25] என டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் மடலேறுதலைப் பற்றி எளிய தமிழில் கூறியுள்ளார்.

தலைவன், தலைவி என இருவர் உருவமும் கிழியில் எழுதுதல் என்ற செய்தி திருக்கோவையாரில் மட்டுமே.

'கழிகின்ற என்னையும் நின்றபின்
கார்மயில் தன்னையும்யான்
கிழியொன்ற நாடி எழுதி[26]

என்னும் வரிகளால் இருவர் உருவத்தையும் எழுதியதாகத் தெரிகிறது.

மதுரைக் கோவையில் சற்று மாறாகத் தலைமகன் தன் உருவத்தை எழுதாது தன் பெயரை மட்டும் எழுதித் தலைவியின் உருவத்தையும் எழுத விரும்புவதாகக் கூறப்பட்டுள்ளது. இதை,

'என்னைக் கிழியில் எழுதாது
என்பேரும் எழுதி மற்றுன்
மின்னித் தனி எழுத்[27]

என்ற வரிகள் தெளிவாக உணர்த்துகின்றன.

திருக்குறளில் மடல்

உலகப் பொதுமறையாம் திருக்குறளின் காமத்துப் பாலில் 'நாணுத்துறவுரைத்தல்' என்ற அதிகாரத்தில் ஆறு பாடல்களில் (1131-33; 1135-37) மடலேறுதல் குறித்துப் பாடியுள்ளார் திருவள்ளுவர். இதில் தலைமகன் கூற்றாகவும் தன் கூற்றாகவும் அவற்றைத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

பக்தி இலக்கியங்களில் மடலேறுதல்

சங்க காலம், சங்கம் மருவிய கால இலக்கியங்களுக்குப் பிறகு நமக்குக் கிடைத்துள்ள பக்தி இலக்கியங்களில் மடலேறுதல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

திவ்விய பிரபந்தத்தில் மடல்

திருவாய் மொழிப் பாசுரத்தில் நம்மாழ்வார் மடலேறுதல் பற்றிக் குறிப்பிடுகிறார்.

'நாணும்நிறையும் கவர்ந்தென்னை நன்னெஞ்சம் கூவிக்கொண்டு
சேணுயர் வானத்திருக்கும் தேவர்பிரான் தன்னை
ஆணையென் தோழி உலகுதோறலர் தூற்றஆம்
கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே[28]

தன்னுடைய நாணத்தையும், நிறையையும் இறைவன் கவர்ந்து கொண்டதாகவும் அதனால் தலைவி மடலேறுவதாக கூறப்பட்டுள்ள செய்தி அறிய முடிகிறது.

திருமங்கை ஆழ்வாரின் சிறிய திருமடல் - பெரிய திருமடல்

பக்தி இலக்கியங்கள் பெருகத் தொடங்கிய இடைக் காலத்தில் ஆடவர் மடலேறுவதாக அமைத்துப் பாடப் பெற்ற மடல் இலக்கியத்தை, மகளிர் மடலேறாவதாக மாற்றியமைத்துப் பாடியதோடு அல்லாமல், அகப்பொருள் துறையில் அமைந்த மடலினை, ஒரு சிற்றிலக்கியமாகவும் உருவாக்கியவர் திருமங்கையாழ்வார். அம்முறையில் உருவான சிறிய, பெரிய திருமடல்கள் இரண்டும் மடல் இலக்கிய வகையில் எழுந்த முதல் இலக்கியங்களாகும்.

'சீரானை செங்கணெடியானைத் தேன்துழாய்த்
தாரானைத் தாமரைபோல் கண்ணானை எண்ணருஞ்சீர்
பேரா யிரமும் பிதற்றி, பெருந்தெருவே
ஊரார் இகழினும் ஊரா தொழியேன்நான்
வாரார்பூம் பெண்ணை மடல்'[29]

எனவும்

–'மற்றிவைதான்
உன்னியுலவா வுலகறிய வூர்வன் நான்
முன்னி முளைத்தெழுத் தோங்கி யொளிபரந்த
மன்னியபூம் பெண்ணை மடல்'[30]

எனவும் நாயகி மடலூரத் துணிவதாக அமைந்துள்ள பாடற் பகுதிகள் உணரத்தக்கனவாக உள்ளன.

கந்தபுராணத்தில் மடலேறுதல் செய்தி

பக்தி இலக்கியமான கந்த புராணத்தில் முருகப்பெருமான் வேடர் மகளான வள்ளியம்மையின் தோழியிடத்தில் கூறுவதாக,

'தோட்டின் மீதுசெல் விழியினாய் தோகையோ டென்னைக்
கூட்டி டாயெனில் கிழிதனில் ஆங்கவள் கோலந்
தீட்டி மாமட லேறிநும் மூர்த்தெரு வதனில்
ஓட்டு வேன்இது நாளையான் செய்வதென் றுரைத்தான்'[31]

என முருகப் பெருமான் வள்ளியம்மைக்காக மடலேறுவேன் என்பதாக் அமைந்துள்ளது நயம் பயப்பதாக உள்ளது.

கல்லாடத்தில் மடல் பற்றிய செய்தி

கி.பி. எட்டாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் கல்லாடம் எனும் சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய இலக்கியத்தில், '

–'செம்மகளிர்
கண்ணெனுந் தெய்வக் காட்சியுட் பட்டோர்
வெண்பொடி யெருக்க மென்புபுனை கிழியினைப்
பூசி யணிந்து பூண்டுபரி கடவிக்
கரத்த தாக்கி யந்நோ
வருத்தி மீட்பர் நிலைவல் லோரே'[32]

என மகளிர் கண் என்று சொல்லப்படுகின்ற தெய்வக் காட்சியுள் அகப் பட்டோர் எருக்கம்பூ முதலியவற்றை அணிந்து பனை மடலேறி வருவர் என்று உலகின் மேல் வைத்துரைத்தலாகச் சொல்லப்பட்டுள்ளது.

கோவை இலக்கியங்களில் மடல் பற்றிய செய்தி

கோவை இலக்கியங்களில் மடல் என்பது ஒரு நிலை பெற்ற துறையாக வளர்ந்து அமைந்திருக்கிறது. பின்னர், இடைக்காலத்தில் தான் மடல் ஒரு தனி இலக்கியமாக உருப்பெற்றது எனலாம்.

திருக்கோவை

மாணிக்க வாசகப் பெருமானின் திருக்கோவையாரில், ஒளி பொருந்திய மகளிரின் கண்வீச்சினால் உள்ளத்தை இழந்தவர்கள் திருநீறு, எருக்கம் பூ,கிழி ஆகியவற்றைக் கையில் பிடித்துப் பனை மடலின் மீது சீறூர்க்கண் ஏறுவர் என்னும் குறிப்புப் பட பாடியுள்ளதைக் காண முடிகிறது. இதை,

'காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் தென்புலியூர்
ஈசான சாந்தும் எருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென ஏறுவர் சீறூர்ப் பனைமடலே'[33]

என உலகின் மேல் வைத்துரைத்தலாகப் பாடப்பட்டுள்ளது.

தஞ்சைவாணன் கோவை

கோவை யிலக்கியங்களில் சிறப்பாகப் போற்றப்படுவனவற்றுள் பொய்யா மொழிப் புலவரின் தஞ்சைவாணன் கோவையும் ஒன்றாகும். இக் கோவை நூற்பாக்கள் நம்பியகப் பொருள் இலக்கண நூலுக்கு எடுத்துக் காட்டுகளாகக் கையாண்டிருப்பதிலிருந்து இதன் பெருமையும், இலக்கியச் சுவையையும் நன்றாக உணர முடிகிறது.

'விரையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளநிறைக்
கரையூர் பொழுதிளங் காளையர் தாங்கிழி கைப்பிடித்துக்
தரையூர் தொறும்பெண்ணை மாமட லூர்வர் தவிர்ந்து பின்னும்
வரையூர்வர்'[34]

வாச்னை பொருந்திய குழலினையுடைய பெண் தந்த காமத்தால் இளங்காளையர் கிழி பிடித்துப் பனைக்குதிரை மீதேறி மடலூர்வர் என்றும், அதுவும் கைகூடவில்லையென்றால் வரைபாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்வர் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

திருவெங்கைக் கோவை

கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றப்படும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாமியற்றிய திருவெங்கைக் கோவையில், தலைவன் தோழிக்கு, உலகின்மேல் வைத்துரைத்தல் என்னும் துறையமைய,

—'தையனல்லாய்
நாமக் கடலைக் கலமிவர்ந் தேறுவர் நானிலத்தோர்
காமக் கடலை மடன்மா விவர்ந்து கடப்பர்களே'[35]

எனவும்

'பூவாக்கி மாலை யணிந்துபொன் னேபோல் பொற்பனையை
மாவாக்கி நாளையும் மூர்நடு வீதி வருகுவனே'[36]

எனவும் மடற்கூற்றாக இவ்விருபாக்களும் அமைந்துள்ளதைக் காணலாம்.

பாண்டிக் கோவை

பாண்டிக் கோவையில், ஆடவர்கள் கழிகாமம் பெருகினால் கரிய பனையின் மீதேறுவர் என்றும், செய்யாதவற்றையெல்லாம் செய்வர் உலகில், என்ற பொருள்பட,

—'ஆடவர்கள்
கடலே றியறகழி காமம் பெருகிற் கரும்பனையின்
மடலே றுவர்மற்றுஞ் செய்யா தனசெய்வர் மாநிலத்தே'[37]

என்று உலகின் மேல் வைத்துரைத்தலாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சங்கர மூர்த்திக் கோவை

இக்கோவை நூலில் உலகின் மேல் வைத்துரைத்தலாக,

'கதிரை யிடுங்கழல் காளையர் தாம்கிழி கைப்பிடித்துக்
குதிரை யெனும்பனை மாமடல் ஊர்வர்'[38]

என மடலூர்வதைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பது உரைத்தக்கதாயுள்ளது.

குற்றாலக் கோவை

குற்றாலத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் பொன் வரையில் உள்ள பெண்ணினை என் நெஞ்சத்தில் இருத்தி பனைமா மீது ஏறி உம்முடைய ஊர் வருவேன் என்று கூறுவதாக.

—'தூயவர்பொன்
வரைப்பெண்ணை நெஞ்சில்வைத் தூர்ந்துவந் தேவந்தி யானுரை
வுரைப்பெண் ணிலையினி வேற்றுரு வாய்த்திரை ஓங்குகடற்
கரைப்பெண்ணை யூர்ந்துநும் மூர்வரு வேன்உந்தன்
[கண்ணெதிரே'[39]

எனத் தலைவன் தன்மேல் வைத்துச் சாற்றலாகப் பாடப்பட்டிருப்பதைக் காணலாம்.

திருமயிலைக் கோவை

தலைமகன் தன்மேல் வைத்துச் சாற்றலாக அமைந்துள்ள இக்கோவைப் பாடலில்,

—'ஏந்திழையே
படமார நின்றிரு மானா குருவம் பரிந்தெழுதி
மடமாவி னேறிநுஞ் சீறூரி னாளை வருகுவனே'[40]

என, நின் திருவுருவத்தைப் படத்தில் எழுதி மடலூர்ந்து வருவேன் என்று அமைத்துப் பாடப்பட்டுள்ளது.

கப்பற் கோவை

தலைவன் தன்மேல் வைத்துச் சாற்றலாக அமைந்துள்ள இப்பாடலில், தலைவன் தலைவியிடம் நின்னை அடைவதற்காக தழை முதலியன கொண்டு முன்பு போல் நிற்க மாட்டேன் என்பதாக,

'தனித்தொண்டு பட்டுத் தரளமுஞ்சங்குந் தழையுங்
கைக்கொண்
டினிப்பண்டு போலநில் லேனொரு நாள்வரு நாளையென்கை
பனித்துண்ட வாணுதற் சேல்விழிப் பான்மொழிப் பங்கயச்செங்
களித்தொண்டை மான்றொண்டை மான்கரு மாணிக்கன்
கப்பலிலே'[41]

என மடலூர்தலின் வன்மை வழி மேற்கொள்ளத் துணிந்தமை தெரிகிறது.

திருக்கழுக்குன்றக் கோவை

—'என்பெருக் கொள்ளிய நீ
றடலூர்ந்த மெய்க்கொண்டு கைக்கொண்ட தோர்பட மார்ந்திடயான்
மடலூர்ந்து நாளை வருவது திண்ண மதிநுதலே'[42]

தலைவியைப் போல படமெழுதி, உடலில் நீறு பூசி, எலும்பு, எருக்கம் பூ அணிந்து நாளை மடலூர்ந்து வருவேன் எனத் தலைவன் தன்மேல் வைத்துச் சாற்றலாக அமைந்துள்ள பாடல் இது.

பேரூர்க் கோவை

தலைவன் தன் மேல் வைத்துச் சாற்றலாக,

'தணிந்தேனு மேயிற்று நாணவக் கெருக்கலந்தார் புயத்தின்
அணிந்தே மடலிவர்ந் தூர்ந்து...........
துணிந்தே வரப்பெறு வேனது பார்த்திடுந் தோகையரே'[43]

என மடற்கூற்றாக அமைந்து சிறப்பதைக் காணலாம்.

மயிலாசலத் தந்தாதியில் மடலூர்தல் பற்றிய செய்தி

பக்தி இலக்கியமாகிய இவ்வந்தாதியில் பக்தன் ஒருவன் தான் தாழை மடல் கருக்கினால் செய்யப்பட் குதிரை ஏறி மயில மலைக்கு வந்து முருகனைக் காண்பதாக.

—'மயில வெழில்வரையில்
தருக்கும ரன்பொடு சங்கர னென்றெனைத் தாழமடற்
கருக்கும ரன்பரி நானேறி வந்துன்னைக் காணபனின்றே'[44]

எனப் பக்தி உணர்வினை மடலேறுவதற்கு இணைத்துச் சொல்லப்பட்டிருப்பது இன்புறத்தக்கது.

நந்திக் கலம்பகத்தில் புறத்துறையாக மடல்

பகை மன்னர்கள் மடலேறும்படியாக வெற்றி மாலையைச் சூடியவன் நந்திவர்மன் என்பதாக, '

—'அடங்கலர்தாம்
மடலேறிட வாகை புனைந்தபிரான்'[45]

என புறத்துறைக்கு மடல் பாடப் பெற்றிருப்பது மடல் இலக்கிய வரலாற்றில் ஒரு மாற்றம் என்று சொல்லலாம். இம்மாற்றம் 9-ஆம் நூற்றாண்டிலேயே புலவர் பெருந்தேவனாரால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இதனால் இலக்கியங்கள் காலச் சூழலில் புலவரின் மனத் தன்மைக்கு ஏற்ப அமைகிறது எனத் தெரிகிறது

புறப்பொருள் வெண்பா மாலையில் மடல் பற்றிய செய்தி

தொல்காப்பியத்திற்குப் பிறகு புறத்திணை இலக்கணத்தைத் தெள்ளத் தெளிவாக விளக்குவது புறப்பொருள் வெண்பாமாலை. அதன் பெருந்திணைப் படலத்தில்,

—'மன்றில்
தனிமடமான் நோக்கி தகை நலம்பா ராட்டிக்
குனிமடல்மாப் பண்ணிமேற் கொண்டு'[46]

எனத் தலைவியின் அழகைப் பாராட்டிப் பனைமடல் குதிரை மீது ஏறி அம்பலத்தின்கண் வருவதாகச் செய்யுள் புனைந்திருப்பது நோக்கத் தக்கது.

இந்நூலில் இவ்வெண்பாவிற்குரிய கொளுவில், ஊரம்பலத்தின் நடுவே பலவற்றையும் பித்தர்போல் சொல்லி மடற் குதிரையைச் செலுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.

மடல் ஒரு இலக்கியமாதல்

சங்க இலக்கியங்களில் ஒரு சில பாடல்களில் மட்டும் பயின்று வந்த மடல் இடைக்காலக் கோவை இலக்கியங்களில், ஒரு முக்கியமான துறையாக இடம் பெற்று வளர்ந்து, பிற்காலத்தில் ஒரு தனி இலக்கியமாக நிலை பெற்றதைக் காண்கிறோம். விதைத்த விதையானது முளையாகி, பிறகு சிறிது வளர்ந்து செடியாகி, இறுதியில் பெரிய மரமாக நிலை பெறுகின்ற அமைப்பைப் போல மடல் இலக்கியமும் வளர்ந்து நிலை பெற்றுள்ளது.

முதலில் தோன்றிய மடல் இலக்கியம்

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் திருமங்கையாழ்வரால் பாடப்பட்ட சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் மடல் இலக்கியங்களே முதலில் தோன்றிய மடல் இலக்கியங்களாக இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவை கண்ணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றவை.

மடல் இலக்கியங்களின் வகைகள்

மடல் பற்றிய இலக்கிய வகையில் மடல், உலாமடல் என இருவகையே காணப்படுகிறது. மடல் என்பது வளமடல் எனவும் வழங்கப்படுகிறது.

வளமடல் இலக்கணம்

பாட்டுடைத் தலைவனின் பெயருக்கேற்ற எதுகை அமைத்துத் தனிச்சொல் இடம் பெறாத இன்னிசைக் கலிவெண்பாவினால் பாடப்படுவது வளமடலாகும்.

இலக்கண விளக்கப் பாட்டியல் கூறும் வளமடல் இலக்கணம்

'அறம்பொருள் வீடெனும் அம்முக் கூற்றின்
திறங்கூடிந்து அரிவையர் திறத்துறும் இன்பம்
பயன்எனக் கலிவெண்பாவால் தலைவன்
பெயர்எது கையினில் பேசுதல் வளமடல்'[47]

என்று இலக்கண விளக்கப் பாட்டியல் வளமடலுக்குத் தெளிவாக இலக்கணம் வகுத்துக் கூறுகிறது.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினுள் இன்பமே சிறந்தது என்று வலியுறுத்திப் பாடுவது வளமடலாகும். மேலும், நவநீதப் பாட்டியல்[48] பன்னிரு பாட்டியல்[49] பிரபந்ததீபிகை[50] பிரபந்த தீபம்[51] ஆகிய பாட்டியல் நூல்களும் இவ்வாறே இலக்கணம் கூறுகின்றன.

மற்றப் பாட்டியல் நூல்கள் கலிவெண்பா என உரைக்க, முத்து வீரியம் முதலில் இன்னிசைக் கலிவெண்பா எனச் சிறப்பிக்கிறது.

வளமடல் என்ற பெயர் அமைப்பில் தோன்றிய மடல் நூல்கள் பாட்டுடைத் தலைவனின் பெயருக்கேற்ற எதுகை அமையப் பாடப்பட்டுள்ளன.

மடல் இலக்கியப் பெயரமைவு

பாட்டுடைத் தலைவனின் பெயரைக் கொண்டதாகவே பெரும்பாலான மடல் இலக்கியங்கள் விளங்குகின்றன. சிறுபான்மை நூல்கள் மடல் வகையைப் பெயராகக் கொண்டு விளங்குகின்றன.

சான்றாக, சித்திரமடல், உலாமடல், கலிமடல் ஆகியவை. பாட்டுடைத் தலைவனின் ஊரின் பெய்ரைக் கொண்டு இலங்குவது திருச்செந்தூர் மடல்.

உலா மடல்

வளமடல் இலக்கியங்கள் இன்பத்தையே சிறப்பித்துப் பாடுவதைப் பாடு பொருளாகக் கொண்டவை. ஆயினும் உலாமடல் இலக்கியத்தின் பாடு பொருள் இதனின்றும் வேறாகக் காணப்படுகின்றது.

தலைமகன், தலைமகள் ஒருத்தியைக் கண்டு காமுற்று கனவில் கூடி, பின்னர் விழித்தெழுந்து அவளைக் காணப்பெறாமையால் பாட்டுடைத் தலைவுன் ஊரின் அம்பலத்தில் மடன்மா ஊர்ந்து அவளை அடையப் பெறுவதாகக் கூறும் பொருளமைப்பைக் கொண்டதாகும். இதில், தலைமகளின் சிறப்பு அவளின் கேசாதிபாதம், பாதாதிகேச வருணனைகள், தலைமகன் காண்டல், தலைமகனின் பிரிவாற்றாமை, தலை மகளைக் கனவில் காணுதல், தலைமகன் புலம்பல், மடல்மா ஊர்வேன் எனல் போன்ற அமைப்பில் பாடப் பெறுபவையே உலாமடல் இலக்கிய வகையாகும்.

இக்கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடலில் காம வின்பமே பெரிதும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அமைப்பு முறைகள் இல்லை. இறுதியல் மட்டும் மடற்கோலம், மடல் ஊர்வேன் என்ற அமைப்பில் முடிவதைக் காணலாம்.

மடல் இலக்கியங்கள் அனைத்தும் எவ்வித மாற்றமும் இன்றி ஒன்று போலவே இருப்பதைக் காண்கிறோம்.

அடிக்குறிப்புகள்

1. சிற்றலக்கியத் திறனாய்வு; பக். 13.
2. இலக்கியக் கொள்கை; தொகுதி2; பக்.76.
3. பிரபந்தமரபில் - பக்.1; பக்.380.
4. இலக்கியக் கொள்கை - தொகுதி 2 - பக்.76.
5. சிற்றிலக்கியத் திரனாய்வு - பக்.37
6. சதுரகராதி - பக்.343.
7. தமிழ் இலக்கிய வரலாறு; 12-ஆம் நூற்றாண்டு; பாகம் 2பக். 336.
8. சீவக சிந்தாமணி. பா 2716.
9. நற்றிணை. பா.188;
10. புறநானூறு. பா.29;
11. தொல்காப்பியம்-பொருளதிகாரம்-நூ.பா.51.
12. திருவெங்கைக் கோவை; பா.8.
13. பத்துப் பாட்டு; பட்டினப்பாலை-வரி 88.
14. தேவாரம்; ப.26:பா6
15. சேந்தன் திவாகரம் - பக், 147;
16. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - நூற்பா 51.
17. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - (களவியல்)-நூற்பா 102.
18. நற்றிணை. பா.377.
19. குறுந்தொகை. பா. 182.
20. கலித்தொகை; பா.141; வரி 22-25
21. கலித்தொகை; பா,147; வர் 57-60.
22. குறுந்தொகை; பா.14; வரி 2-6.
23. குறுந்தொகை; பா.17.
24. நெய்தற்கலி; பா.21; வரி 8 - 11.
25. குறுந்தொகைப் பதிப்புரை - பக்.42.
26. திருக்கோவையார் - மடற்றிறம். பா.4.
27. மதுரைக் கோவை. பா.145.
28. நாலாயிர திவ்விய பிரபந்தம்; திருவாய்மொழி; மாசறுசோதி. பா.9
29. சிறிய திருமடல்; வரி 75-77.
30. பெரிய திருமடல்; வரி 146-148.
31. கந்த புராணம்; வள்ளியம்மை திருமணப் படலம்; பா.136.
32. கல்லாடம். பா.33; வரி 25-30.
33. திருக்கோவையார்; மடற்றிறம்; பா.2.
34. தஞ்சைவாணன் கோவை; பா.102.
35. திருவெங்கைக் கோவை; பா.105.
36. திருவெங்கைக் கோவை; பா.106.
37. பாண்டிக்கோவை; பா.92.
38. சங்கரமூர்த்திக் கோவை; பா.102.
39. குற்றாலக் கோவை; பா.114.

40. திருமயிலைக் கோவை; பா.116.
41. கப்பற் கோவை பா,89.
42. திருக்கழுக்குன்றக் கோவை; பா.11443. பேரூர்க் கோவை; பா.114.
43. பேரூர்க்கோவை; பா.119.
44. மயில்ாசலத் தந்தாதி; பா.33 - அந்தாதிக் கொத்து.
45. நந்திக்கலம்பகம்; பா.59.
46. புறப்பொருள் வெண்பா மாலை; பெருந்திணைப் படலம்; பா.326.
47. இலக்கண விளக்கம். நூ,பா.484.
48. நவநீதப் பாட்டியல். நூ.பா.47.
49. பன்னிரு பாட்டியல். நூ.பா.146.
50. பிரபந்ததீபிகை. (இலக்கணத் தொகை) நூ.பா.20.
51. பிரபந்த தீபம்; நூ.பா.58.

2. நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியராகிய வித்துவான் சொக்கநாதப் பிள்ளை அவர்களைப் பற்றிய விவரம் ஓரளவு கிடைக்கிறது.

பெயர்

சொக்கநாதப்பிள்ளை என்பதுதான் இவருடைய இயற்பெயர் எனத் தெரிகிறது.

'பல பட்டடைச் சொக்கநாதப் பிள்ளை'[1] எனவும்

'பல பட்டடைச் சொக்கநாதக் கவிராயர்'[2] எனவும்

இவர் பெயர் வழங்கும் என டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

'சொக்கநாதப் புலவர், சொக்கநாதக் கவிராயர்'[3] என்றும் வழங்கியுள்ளனர்..

'தமிழ் நாட்டில், பல சொக்கநாதப் புலவர்கள் இருந்திருக்கின்றனர். ஆகையால், 'பல பட்டடை' எனும் சிறப்பு அடைமொழி கொடுத்து வழங்கினர்'[4] என்று ***கலைக் களஞ்சியம்*** தெரிவிக்கிறது.

இம்மடல் இலக்கியச் சுவடியின் முகப்பில் 'வித்துவான் சொக்கநாதப் பிள்ளை அவர்கள் பாடல்' எனக் குறிப்பிட்டு இருப்பதால் இந்நூலாசிரியர் பல பட்டடைச் சொக்கநாதப் பிள்ளையினின்றும் வேறானவராக இருக்க இயலுமோ? என ஐயம் தோன்றுவதாக உள்ளது. இவ்வையத்தை,

'அக்காலத்தில் சன்னிவாடியில் ஜயின்தாராக இருந்த நரசிங்க நாயக்கர் மேல் வளமடல் ஒன்று இயற்றியிருக்கிறார்'5 என்று கலைக் களஞ்சியம் தெளிவு படுத்துகிறது. 'இதே கூற்றை டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களும் குறிப்பிடுகின்றார்.'[6]

இவற்றிலிருந்து மக்கள் இவரை அன்பு மேலிட்டாலும், மரியாதைக்காகவும் பலவிதமாகப் பெயரிட்டு வழங்கியுள்ளனர் எனத் தெரிகிறது.

பிறப்பிடம்

இப்புலவர் முதலில் தொண்டை நாட்டில் வாழ்ந்தவர்[7] எனத் தெரிகிறது. மதுரையில் வாழ்ந்திருந்தவர் என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் குறிப்பிடுகின்றார்[8]. எனினும் இந்நூலாசிரியரின் பிறப்பிடம் எது என்பது பற்றித் தெளிவாகக் குறிப்பிட இயலவில்லை.

குலம்

இவர் எந்தக் குலத்தைச் சார்ந்தவர் என்று தெளிவாகக் கூறச் சான்றுகள் இல்லை. பெயரின் ஈற்றில் உள்ள 'பிள்ளை' என்பதைக் கொண்டு 'சைவ வேளாளர்' குலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

தொழில்

இவருடைய முன்னோர்கள் மரபு வழியாக மதுரை மன்னர்களிடம் பல பட்டடைக் கணக்கு என்னும் அலுவல் பார்த்து வந்தனர் எனத் தெரிகிறது.

இவருடைய தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை என்று உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுகின்றார்.[9]

காலம்

17-18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர் எனத் தெரிகிறது.

திருமலை நாயக்கர் ஆட்சி புரிந்த காலத்தில் அவருடைய அவைக்களப் புலவராக விளங்கினார் எனவும் கூறுவர்.[10]

விறலி விடு தூது இயற்றிய சுப்பிரதீபக் கவிராயருக்கும், இவருக்கும் இறுதிக்காலம் வரை சிறிது மன வேறுபாடு இருந்ததாகத் தெரிகிறது[11].

வீரமாமுன்வர் திருமலை நாயக்கரின் காலத்தவர். வீரமாமுனிவரின் ஆசிரியர் சுப்பிரதீபக் கவிராயர். எனவே சொக்கநாதப் பிள்ளையும் சுப்பிரதீபக் கவிராயரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் எனத் தெரிகிறது.

திருமலை நாயக்கர் காலம் கி.பி.1623-1659.

'தேவையுலாவினால்'[12] அக்காலத்தில் (கி.பி.1711-1725) இராமநாத புரத்தில் விசயரகுநாத சேதுபதி என்பவர் அரசாண்டு வந்தாரெனத் தெரிகிறது.

இப்புலவர் சேதுபதியின்மீது பணவிடுதூது என்னும் நூல் பாடியிருப்பத னால் அம்மன்னரின் காலத்தில் வாழ்ந்தவர் எனக் கருத இடமுண்டு.

சமயம்

இப்புலவர் மதுரையில் கோயில் கொண்ட சொக்கநாதப் பெருமானிடத்தும் அங்கயற் கண்ணம்மையிடத்தும் பேரன்புடையவர்; அவர்களை மணங்கனிந்து பல தனிப் பாடல்களால் வாழ்த்திப் பாடியிருக்கிறார்.

இவர் மதுரைக் கோயில் சம்பந்தமாக 'மும்மணிக் கோவை' 'யமக அந்தாதி' போன்ற சிற்றிலக்கிய நூல்கள் பல இயற்றியுள்ளார், திண்டுக்கல்லில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது 'பத்மகிரிநாதர் தென்றல் விடு தூதும்', சணபக நல்லூர்ச் சிவபெருமான் மீது 'வண்டு விடு தூதும்' இயற்றியுள்ளார். இச்செயல்களால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் எனத் தெளிவாக அறிய முடிகிறது.[13]

இவர் திருமால் மீது 'அழகர்கிள்ளை விடுதூது' என்னும் நூல் பாடியிருப்பதால் சமரச சமய நோக்கம் உடையார் என்பதும் புலனாகின்றது.

பாடிய நூல்கள்

1. *அழகர் கிள்ளை விடுதூது*
2. *சண்பக நல்லூர்ச் சிவபெருமான் வண்டு விடுதூது*
3. *பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது*
4. *மதுரை மும்மணிக் கோவை*
5. *மதுரை யமக அந்தாதி*

6. தேவை உலா
7. விசயரகுநாத சேதுபதி பணவிடு தூது
8. விஞ்சைக் கோவை

இவை தவிர, வள்ளல்கள் சிலரைப் புகழ்ந்து பாடிய தனிப் பாடல்களும் உண்டு. இவர் 'படிப்பவர்களுடைய உள்ளத்தில் விஷயங்களைத் தெளிவாகப் பதியும்படி செய்யும் முறையில் இவர் தனிப் பாடல்கள் சிறப்பு வாய்ந்தவை'[14] என உ,வே.சா. அவர்கள் பாராட்டுவது கவனிக்கத் தக்கது.

இப்புலவர் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திற்குச் சிறப்புப்பாயிரம் இயற்றியுள்ளார் எனவும் உ.வே.சாமிநாதையர் அவர்கள் குறித்துள்ளார்.

பாடப்பட்ட மன்னர்கள் வள்ளல்கள்

இப்புலவர் இறைவனைப் பற்றிய பாடல்கள் மிகுதியாகப் பாடியுள்ளார்.

மன்னர் என்று குறிப்பிடும் போது விசயரகுநாத சேதுபதி மீது 'பண விடு தூது' என்னும் நூல் ஒன்று மட்டுமே அறிய முடிகிறது. இதைத் தவிர விசய ரகுநாத சேதுபதியின் அமைச்சனான 'தெய்வகன்னி' என்பவர் மீது 'விஞ்சைக் கோவை என ஒரு நூலும்[15] கன்னிவாடி ஜமின்தார் நரசிங்கப்ப நாயக்கன் மீது பாடிய வளமடல் ஒன்றும் 'சிவந்தான்' என்னும் அரசரைக் குறித்துச் சில தனிப் பாடல்களும், செங்குன்றையூரன்,[16] வல்லைக் காளத்தி முதலியார்[17] எனும் வள்ளல்களைக் குறித்துப் பல பாடல்களும், 'மாவைக் கறுப்பன்'[18] என்ற செல்வந்தனைக் குறித்துச் சில பாடல்களும் ஆக தனிப்பாடல்களும் பல இயற்றியுள்ளார்.

சமகாலப் புலவர்கள்

1. சுப்பிரதீபக் கவிராயர்
2. படிக்காசுப் புலவர்
3. தாயுமானவர்
4. திரிகூட ராசப்பக் கவிராயர்
5. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்
6. சுடிகை முத்துப் புலவர்
7. உமறுப் புலவர்
8. வீரமாமுனிவர்
9. மதுர கவிராயர்

ஆகியோர் இந்நூலாசிரியரின் காலத்தில் வாழ்ந்த புலவர்களாகக் குறிக்கப்படுகின்றனர். அவர்களுள்,

படிக்காசுப் புலவர்

இவருக்குத் தில்லைக் கூத்தப் பிரான் தினமும் படிக்காசு ஈந்தமையின் இவர் படிக்காசுப் புலவர் எனப் பெயர் பெற்றார். இவர் தொண்டை நாட்டில் 'பொன் விளைந்த களத்தூர்' என்னும் ஊரினர். இராமநாதபுரத்து இரகுநாத சேதுபதிகளிடத்து அவைப் புலவராக இருந்தவர் எனத் தெரிகிறது. இவரது காலம் கி.பி.1686 - 1723.[19]

இவருடைய பாடலைச் சிறப்பித்துத் 'தொட்டரலும் கை மணக்கும் சொன்னாலும் வாய் மணக்கும்'[20] என்று சொக்கநாதப் பிள்ளை புகழ்ந்து பாடியிருப்பதிலிருந்து இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர் என அறிலாம்.

சுப்பிரதீபக் கவிராயர்.

சொக்கநாதப்புலவரும்,கவிராயரும் நீண்டகாலம் பகைமையோடு இருந்ததாகத் தெரிகிறது. சொக்கநாதப் பிள்ளை பாடிய சண்பக நல்லூர்ச் சிவபெருமான் வண்டு விடுதூதில், சண்பக மலரில் வண்டுகள் மொய்ப்பதாகப் பாடியதைச் சுப்பிரதீபக் கவிராயர் மறுக்கவே, உடனே இறைவர் அருளால் வண்டுகளை மொய்ப்பிக்கச் செய்து காட்டினார் புலவர். இதனால் இருவரும் சமகாலத்தவர் எனத் தெளிவாகிறது.

மற்றும் திரிகூட ராசப்பக் கவிராயர், வீரமாமுனிவர், உமறுப் புலவர், கடிகை முத்துப் புலவர் ஆகியோர் திருமலை மன்னரின் காலத்தவர்கள். சுப்பிரதீபக் கவிராயரின் மாணவர் வீரமாமுனிவர், வீரமாமுனிவர், மக்களைக் கிறித்துவ மதத்தில் ஈடுபடுமாறு செய்வதைக் கண்ட, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், அவரைக் கண்டிக்கும் பொருட்டு 'ஏசுமத நிராகரணம்' என்ற நூலைப் பாடினார். இதனால் சொக்கநாதப் புலவரும் சம காலத்தவர் என எண்ணலாம். தாயுமானவர் திரிசிரபுரத்தில் விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின் கணக்கப் பிள்ளையாயிருந்தவர். இவரது காலம் கி.பி.1706 - 1744 என்று அறிய முடிகிறது. எனவே தாயுமானவரின் சமகாலத்தைச் சார்ந்தவர் சொக்கநாதப்பிள்ளை என அறியலாம்.

தொண்டை நாட்டில் வாழ்ந்த வல்லைக் காளத்தி முதலியார் என்ற வள்ளலைக் குறித்து மதுர கவியாரும், சொக்கநாதப்பிள்ளையும் பாடியிருப்பதிலிருந்து இவ்விரு புலவரும் சமகாலத்தவர் என்று தெரிகிறது.

அடிக்குறிப்புகள்

1-2. அழகர் கிள்ளை விடு தூது - நூலாசிரியர் வரலாறு;
3. கலைக் களஞ்சியம் - தொகுதி 5; பக்.245.
4. கலைக் களஞ்சியம் - தொகுதி 5; பக்.245.
5. கலைக் களஞ்சியம் - தொகுதி 5; பக்.245.
6. அழகர் கிள்ளை விடு தூது - நூலாசிரியர் வரலாறு:
7. தமிழ்ப் புலவர் அகராதி - பக்,282.
8. கலைக் களஞ்சியம்; தொகுதி.5.பக்.245.
9. கலைக் களஞ்சியம்; தொகுதி 5.பக்.245.
10. தனிப்பாடல் திரட்டு தொகுதி-1; பக்.279.
11. தனிப்பாடல் திரட்டு; தொகுதி-1; பக்,306.
12. அழகர் கிள்ளை விடு தூது - நூலாசிரியர் வரலாறு.
13. கலைக் களஞ்சியம்; தொகுதி - 5; பக்.245.
14. அழகர் கிள்ளை விடுதூது - நூலாசிரியர் வரலாறு.
15. தனிப்பாடல் திரட்டு; தொகுதி - 1 பக். 306.
16-17. தமிழ்ப் புலவர் அகராதி; பக்.282.
18. தனிப்பாடல் திரட்டு; பகுதி-1. பாடல் 777.
19. தமிழ் நூல் வரலாறு; பாலூர் கண்ணப்ப முதலியார்; பக்.332.
20. தமிழ் நூல் வரலாறு; பாலூர் கண்ணப்ப முதலியார். பக். 332.

3. பாட்டுடைத் தலைவன் வரலாறு.

இவ்வளமடலின் பாட்டுடைத் தலைவன் கன்னிவாடி பாளையப்பட்டின் தலைவனாக ஆட்சி புரிந்த நரசிங்கப்ப நாயக்கன் என்று சுவடியின் முகப்பில் எழுதப்பட்டுள்ள குறிப்பின் மூலம் அறிய முடிகிறது.

பாட்டுடைத் தலைவனின் ஊர்ப் பெயர்க் காரணம்

இப்பாட்டுடைத் தலைவனின் தந்தையான 'சின்னக் கதிரி நாயக்கர் தீரமெப்படி என்று ஒருபடியும் கட்டி அதில் சிறிது பூமிக்கும் வழி செய்து கொண்டு அவ்விடத்திலிருந்ததில் மீனாட்சி சுந்தரேசுபரன் அந்த மார்க்கத்தில் போனதாகவும், சுவாமி முன்னதாகப் போய் அம்மன் பின்னாலே நின்றதாகவும், அப்போது சுவாமி திரும்பிப் பார்த்து கன்னிவாடி என்று கூப்பிட்டதாயும், நீர் நல்லாமவன் என்று சொன்னதாகவும் சொற்பன மாச்சுது. அப்போது அம்மன் நின்ற இடத்தில் கன்னிவாடி என்ற ஊர் கட்டுவிச்சி சுவாமி நின்ற இடத்தில் 'நல்லாம் பாடகன்' என்ற கிராமம் கட்டி வைச்சார். அப்போது, கன்னிவாடி என்று இந்த பாளையப் பட்டுக்குப் பேர் உண்டாச்சுது'[1] என்ற வரலாற்றின் மூலம் கன்னிவாடி என்னும் ஊரின் பெயர்க் காரணத்தைத் தெளிவாக, அறியமுடிகிறது.

கன்னிவாடி ஜமீன்தார் காதலில் தலைவி கூறுவதாக,

'ஆடுமயில் வாகனமே ஆரணங்கே பூவை கன்னி
வாடிஎன்று சொன்னானே வாழுமூர் சொல்லலையே'[2]

என வரும் கூற்று இவ்வூரின் பெயரைத் தெற்றென விளக்குகிறது எனலாம்.

பாளையப் பட்டுகள்

பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, நாயக்க வமிசத்தினர் செல்வாக்குப் பெற்று மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர். அந்நாய்க்க மன்னர்களில் விசுவநாத நாயக்கர், விசய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் பேரரசரின் பிரதிநிதியாகத் தமிழகத்தினை ஆட்சி புரிந்து வந்தார். 'விசுவநாத நாயக்கர் உள்நாட்டில் அமைதியினை நிலை நாட்டுவதற்காக எழுபத்திரண்டு பாளையப் பட்டுகளை ஏற்படுத்தினார்'[3] என்று புறவரலாறுகள் கூறுகின்றன.

கன்னிவாடி பாளயப்பட்டு

திண்டுக்கல்லைச் சேர்ந்த பதினெட்டுப் பாளையப்பட்டுகளுக்கும் கன்னிவாடி தான் பெரிய பாளையப்பட்டாக விளங்கி இருந்ததாகத் தெரிகிறது.

'மதுரை மாவட்டத்தில் கன்னிவாடிதான் மிகப் பெரிய ஜமீனாக இருந்தது. யானைகள் மிகுந்த காடுகள் அதிகம் இருந்து பாதுகாப்பாக விளங்கின'[4] என்றும் அறிய முடிகிறது.

இக்குறிப்புகளிலிருந்து கன்னிவாடி பாளையப்பட்டு எதிரிகளின் தாக்குதலுக்கு எளிதில் உட்படாததாக விளங்கியது என தெரிய வருகிறது.

இக்கன்னிவாடி செம்பட்டியிலிருந்து ஒட்டன்சத்திரம் செல்லும் வழியில் உள்ளது.

நரசிங்கப்ப நாயக்கர்.

திருமலை நாயக்கர் ஆட்சியின் கடைசிக் காலத்தில் கன்னிவாடி பாளையப்பட்டுக்குப் பொறுப்பேற்று ஆட்சி புரிந்தவர் இப்பாட்டுடைத் தலைவனான நரசிங்கப்ப நாயக்கன்.

சின்னக் கதிரி நாயக்கரின் இரு புதல்வர்களான நரசிங்கப்பன், பெத்தன்ன் என்பவருள் மூத்தவர் நரசிங்கப்ப நாயக்கன்.

தாய் தந்தை

இந்நூலின் மூலம் பாட்டுடைத் தலைவனின் தாயார் பற்றிய விவரம் அறிய முடயவில்லை. ஆனால்

'புரியுந்ததவத்தாலே பூவுலகில் வந்த
தெரியலர் போற்றுசெய சின்னக் கதிரன்'

என்னும் இந்நூலின் 241-ஆம் கண்ணியினால், இவரது தந்தையின் பெயர் சின்னக் கதிரி நாயக்கர் என்பது அறிய முடிகிறது.

இதே பெயரைக் 'கன்னிவாடி பாளையக்காரர் அப்ப நாயக்கன் வமிசாவளியும்'[5] தெரிவிக்கிறது.

ஆட்சி முறை

பாட்டுடைத் தலைவன் நரசிங்கப்ப நாயக்கன் நீதி நெறிப் படி ஆட்சி நடத்துபவர் என்று 244-ஆம் கண்ணியினாலும், மக்கள் போற்றும் அளவுக்கு அருமறைகளின்படி ஆட்சிபுரிந்தவர் என 249-ஆம் கண்ணியினாலும் இவருடைய ஆட்சியின் முறைகள் தெரிகிறது. 226, 237-ஆம் கண்ணி களினால் இவரது கொடைத் தன்மை தெற்றெனப் புலனாகின்றது.

இவர் தன் தந்தைக்குப் பிறகு கன்னிவாடி பாளையப்பட்டின் தலைமைப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, 'மைசூர்ப் படை தளகர்த்தனான ஆரணி வெங்கடப்பய்யன் மதுரை மீது படையெடுத்து வந்தபோது நரசிங்கப்ப நாயக்கன் தன் படைகளுடன் அவனை எதிர்த்துப் போரிட்டு, திண்டுக்கல் வரை துரத்தியுள்ளார் என்பதும்,[5] இவர் ஆட்சிக் காலத்தில் மதுரைப் பேரரசின் மன்னனாகத் திருமலை நாயக்கரின் மகன் முத்துத் திருமலை நாயக்கர் முடிசூட்டி ஆட்சி புரிந்து வந்தார் என்பதும்[6] 'இவருக்கு உதவியாக இவர் ஆட்சிக்குட்பட்ட சிறுபகுதிகளை இவர் தலைமையின்கீழ் கம்மவார், சூத்திரர், இராவுத்தர் போன்ற இனத்தலைவர்கள் ஆட்சி புரிந்தனர்'[7] என்பதுமாகிய பல செய்திகள் புலனாகின்றன.

வாய்மை தவறாது மனுநெறிப்படி ஆட்சி புரிபவர் என்பதை 244-ஆம் கண்ணி மூலமும் இவருடைய வீரம், போர்த் திறமை முதலியன 256 - 265-ஆம் கண்ணிகளின் மூலமும் அறியமுடிகிறது. இவர் கி.பி.1686 முதல் 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளார்.[8]

நரசிங்கப்ப நாயக்கனின் சமகாலத்தவர்கள்

முத்துத் திருமலை நாயக்கர்

இப்பாட்டுடைத் தலைவன் ஆட்சிப் பொறுபேற்று அரசு புரிந்த காலத்தில் மதுரைப் பேரரசின் மன்னராக முத்துத் திருமலை நாயக்கர் விளங்கியுள்ளார்.

விசய ரகுநாத சேதுபதி

இந்நூலாசிரியர் விசய ரகுநாத சேதுபதியின் மீது 'பணவிடு தூது' என்னும் நூல் இயற்றியிருப்பதிலிருந்து இவரின் சமகாலத்தவராக இப்பாட்டுடைத் தலைவரைக் கருதலாம்.

இவர்களைத் தவிர, விசயரங்க சொக்கநாத நாயக்கர், சிவந்தான், செங்குன்றையூரன், வல்லை நகர்க் காளத்தி முதலியார், மாவைக் கறுப்பன் ஆகியோர் இப்பாட்டுடைத் தலைவனின் சமகாலத்தவர்கள் என்று இந்நூலாசிரியரால் பாடப்பட்ட தனிப் பாடல்களாலும், நூல்களாலும் விளங்குகின்றன.

மறைவு

இப்பாட்டுடைத் தலைவனது மறைவு குறித்து எவ்விதச் சான்றும் கிட்டவில்லை.

நூல் எழுந்த காலம்

இவருடைய ஆட்சியாண்டைக் கொண்டு மதுரையில் பேரரசாக இருந்த திருமலை நாயக்கருக்குப் பின் பொறுப்பேற்றுக் கொண்ட சொக்கநாத நாயக்கரின் காலத்தில் (கி.பி.1659-1682) இந்நூல் பாடப்பட்டிருக்கலாம் என்று உணர முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. கன்னிவாடி பாளையகாரர் அப்பநாயக்கன் வமிசாவளி, (சுவடி).
2. சிறுபிரபந்த வகைகள்; பக்.42.
3. தமிழக வரலாறு; பக்.155.
4. மதுரை மாவட்டம்; பக்,364.
5. கன்னிவாடி பாடளயக்காரர் அப்ப நாயக்கன் வமிசாவளி, (சுவடி).
6. கன்னிவாடி பாளயக்காரர் அப்ப நாயக்கன் வமிசாவளி, (சுவடி).
7. 253-254-ஆம் கண்ணிகள்.
8. கன்னிவாடி பாளையகாரர் அப்ப நாயக்கன் வமிசாவளி.

4. நூலாராய்ச்சி

முன்னுரை

முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் ஆட்சிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு, தமிழகத்தில் நாயக்கர் வமிசம் ஆட்சிக்கு வந்த போது தமிழகம் பல கூறுகளாகப் பிரிந்து கிடந்தது.

ஆங்காங்கு சில கிராமங்களில் கிராமத்திற்கு ஒரு பாளையக்காரன் என்ற பெயரில் சிலர் செல்வாக்குப் பெற்று சமீன்தாராகக் காட்சியளித்துள்ளனர்.

அந்த நூற்றாண்டுகளில் பல தமிழ்ப் புலவர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் தாழ்ந்திருந்தது. மூவேந்தர்களால் ஆதரிக்கப்பட்ட புலவர்களெல்லாம் சோற்றுக்காகப் பாட வேண்டிய நிலையில் தாழ்ந்திருந்த போது, பாளையக்காரர்களின் மீது கவி பாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மடல், தூது, உலா போன்ற இவையெல்லாம் இறைவனையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவனாகக் கொன்டு பாடப்படுபவையேயாகும்.

அந்த வகையில் திண்டுக்கல் சீமையைச் சேர்ந்த கன்னிவாடியை ஆட்சி புரிந்த நரசிங்கப்ப நாயக்கனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்ததே இந்நூல்.

எழுதிய சொக்கநாதப் பிள்ளை நயம்படப் பாடுவதில் வல்லவர் எனத் தெரிகிறது.

சொக்கநாதப் பிள்ளையின் வளமடல் - ஓர் ஆய்வு

வித்துவான் சொக்கநாதப் பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டதும், கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் என்பவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டதுமான இவ்வளமடல் தவிர,

1. *செயங்கொண்ட மாமுனி வளமடல்.*
2. *நரசிங்கப்பைய ராசன் வளமடல்*
3. *நரசிங்க ராயன் வளமடல்.*

என மூன்று வளமடல்கள் உள்ளன. இவை மூன்றும் இன்னமும் அச்சாகவில்லை.

ஈண்டுச் சொக்கநாதப் பிள்ளையின் கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடலை மட்டும் நோக்கலாம்.

நூல், நூலாசிரியர், பாட்டுடைத் தலைவன்

இவ்வளமடல் சுவடியின் முகப்பில்,

'ஹரி ஓம் நன்றாக, கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்' என்றும்,

'வித்துவான் சொக்கநாதப் பிள்ளையவர்கள் பாடல்' என்றும் எழுதப் பட்டுள்ள குறிப்புகளின் மூலமும், இந்நூலின் பாட்டுடைத் தலைவன் பெயர்

நரசிங்கப்ப நாயக்கன் என்றும், நூலாசிரியரின் பெயர் சொக்கநாதப் பிள்ளை என்றும் புலனாகின்றது.

பாட்டுடைத் தலைவரது பெயரும், அவரைப் பற்றிய பிற செய்திகளும் நூலினுள் கண்ணிகளில் அகச் சான்றாகவும் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

நூலின் காலம்

இந்நூல் இயற்றிய காலத்தைப் பற்றி அறிய நூலாசிரியர், இவ்வளமடலில் பாட்டுடைத் தலைவன் ஆகியோரது புறவரலாறுகள் ஓரளவு சான்றாக அமைகின்றன. சில அகச் சான்றுகளும் நூலினுள் துணை புரிகின்றன. இவை முன்பே கூறப்பட்டன.

வளமடல் பொருளமைதி

வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கச் சூத்திரத்தின்படியே இவ்வளமடல் தனிச் சொல் இல்லாத இன்னிசைக் கலிவெண்பாவால் இயற்றப்பட்டுள்ளது.

பெரும்பாலான மடல் இலக்கியங்களைப்போலவே இந்நூலும் அகப் பொருள் அமைப்பில் உள்ளது. புராண, இதிகாசச் செய்திகளிலும் கூட அகப் பொருளுக்கே அதிக இடம் கொடுத்து சிறப்பிக்கப்பட்டுள்ளது.

நூலமைப்பு முறை

இவ்வளமடல் நூலின் முதற்கண் நேரிசை வெவண்பாவினால் இயற்றப் பட்ட விநாயகர் வணக்கமும் (காப்புச் செய்யுள்), பாட்டுடைத் தலைவர் பெயர்க்கெதுகை அமையப் பெற்ற இன்னிசைக் கலிவெண்பாவினால் அமைந்த 338 கண்ணிகளைக் கொண்டு இருக்கின்றன. இறுதி வரி மிக நீண்டதாக இருக்கிறது. சீர், தளை முறைப்படி பிரித்தாலும் கூடுதலாக ஒரு வரி இருக்கிறது.

இவ்வள மடலின் அமைப்பைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. *காமச்சுவை இணைந்த புராணச் செய்திகள்.*
2. *காமத்தோடு இறைத்தத்துவத்தை ஒபபிடும் செய்திகள்.*
3. *பாட்டுடைத் தலைவன் சிறப்பு.*
4. *மடற்கோலம், மடல் ஊர்தல் பற்றிய செய்த்கள்.*

மொத்தம் உள்ள 338 கண்ணிகளில் புராணச் செய்திகள் மட்டும் 80 கண்ணிகளில் கூறப்பட்டுள்ளன; காம இன்பத்தைப் பற்றிய செய்திகள் 126 கண்ணிகளிலும், தலைவியின் சிறப்பு 26 கண்ணிகளிலும், தலைவனின் சிறப்பு 50 கண்ணிகளிலும், மற்ற செய்திகளும், மடற் கோலம், மடல் ஊர்வேன் என்ற செய்தியும் மீதமுள்ள கண்ணிகளிலுமாக விளக்கப்பட்டுள்ளன.

மடல் இலக்கியத்திற்கு உரிய கேசாதிபாதம், பாதாதிகேசம், தசாங்கம் போன்ற வருணனைகள் பற்றிய முறைவைப்பு இந்நூலில் இல்லை. இறுதியில் 12 கண்ணிகளில் மடற்கோலம், மடல் ஊர்வேன் என்று கூறும் பகுதியாக அமைத்து மடல் இலக்கிய வகையை நிலை நிறுத்துகிறது.

நூலாசிரியர் எண்ணம்

மொத்தக் கண்ணிகளின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும் போது காம இன்பத்திற்கே அதிகமாக முக்கிய இடம் கொடுத்து இருப்பது தெரிய வருகின்றது.

காமத்தைப் பற்றிய செய்திகளோடு ஒப்பிடும் போது பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகள் குறைவே. எனினும் புராண, இதிகாசச் செய்திகளிலும் காம வின்பத்தை மையமாக வைத்தே பாடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகளோடு சில வரலாற்றுச் செய்திகளும் காணப்படுகின்றன.

மொத்தத்தில் இந்நூலை நோக்கும் பொழுது கடவுளை அடைவதற்கே காமவின்பம்தான் அடிப்படை என்பதுபோல் அதிக இடம் கொடுத் திருக்கிறார். இப்புலவர் காலத்தில் வாழ்ந்த இப்பாட்டுடைத் தலைவன் காமவின்பத்தில் மூழ்கித் திளைத்தவனாக இருந்திருப்பானோ? என ஐயம் ஏற்படும் அளவுக்கு புலவர் நூலை இயற்றியிருக்கிறார்.

நூலில் பொதிந்துள்ள செய்திகள்

காமவின்பத்தைப் பற்றிய செய்திகள் மிகச் சிறப்பாகச் சொல்லப் பட்டுள்ளன.

இறைவர்களின் காம விளையாடல்கள் பற்றி நயமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

நோய்கள், மருந்து வகைகள், தத்துவம், பேய்களின் செயல்கள், பரத்தையர் ஆகிய இவைகளின் தன்மைகள் சுட்டப்பட்டுள்ளன.

கடவுளர்கள் காமச்சேட்டைகளில் எப்படியெல்லாம் கீழ்த்தரமாக நடந்து கொண்டனர் என்ற செய்தியைப் புராணக் கதைகளோடு இணைத்துச் சுவைபடத் தொகுத்து விளக்கியுள்ளமை போற்றத்தக்கதாக அமைந்துள்ளது.

இலக்கிய இலக்கணச் செய்திகள்

புலவர்கள் தங்கள் படைப்புகளில் தமக்கு முந்தைய காலத்து இலக்கியங்களின் கருத்துகளை கையாளாமல் இருப்பது இல்லை என்றே கூறலாம்.

அவ்வகையில் இப்புலவரும், 'முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போல் போற்றுவம்' என்பதற் கொப்ப திருக்குறள், நன்னூல், யாப்பருங்கலக் காரிகை போன்ற இலக்கிய இலக்கணக் கருத்துக்களை நூலினுள் எடுத்துச் சொல்லியிருப்பதைக் காண முடிகிறது.

திருக்குறள் கருத்து

'ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது'[1]

என்னும் குறள் சிறிதும் மாற்றம் பெறாமல் எடுத்தாளப் பட்டிருப்பதை இந்நூலின் 314-ஆம் கண்ணியில் காணலாம்.

நன்னூல்

'மருவியநன் னூன்மங் கலசூத் திரந்தான்'

என 176-ஆம் கண்ணி வரி மூலம் நன்னூல் இலக்கணத்தின் பெருமையைச் சுட்டுகிறார். இதனால் இலக்கணப் புலமை வாய்ந்தவர் என்பதை அறியலாம்.

யாப்பருங்கலக் காரிகை

கருவிளங்காய், கூவிளங்காய் என்று சீர்களின் வாய்பாடு பற்றி 173-ஆம் கண்ணியிலும், இருசீர், முச்சீர் என சீர்களின் வகைகள் பற்றி 175-ஆம் கண்ணியிலும் சொல்லியிருப்பதிலிந்து காரிகை இலக்கணத்தில் பெரிதும் பயிற்சியுடையவர் எனத் தெரிகிறது.

யாப்பருங்கலக் காரிகையில் பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவிற்கும், சுண்ணமொழி மாற்றுப் பொருள் கோளுக்கும் எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்ட,

'சுரையாழ அம்மி மிதப்ப'[2]

என்னும் பாடலின் அடியைத் தம் நூலில் கையாண்டிருப்பதிலிருந்து இலக்கிய, இலக்கணப் புலமை வாய்க்கப் பெற்றவர் என்றும், முன்னோர் கருத்துக்களைச் செவ்வனே போற்றுபவர் என்பதும் புலனாகின்றது.

நூலில் பயின்று வந்துள்ள புராணச் செய்திகள்

புராண வரலாறுகளைக் கூறும் சில விளக்கங்களையும், சில நம்பிக்கை களையும் புராணச் செய்திகள் என்ற அமைப்பில் அடக்கலாம். இத்தகைய செய்திகளாக இந்த நூலில் இடம் பெற்றுள்ளவைகள்:

1. படைத்தல் தொழிலைச் செய்பவன் பிரமன்[3](5)
2. வரமுனியாகிய அகத்தியர் வாழ்வது பொதியைமலை(29)
3. விநாயகன் கரி முகத்தையும், தும்பிக்கையுடையவன் என்ற செய்தி (30)
4. இலக்குமியைத் திருமால் பிரிந்து போய் இராமேசுவரத்தில் கண்ட செய்தி (41)
5. திருமால் மோகினி அவதாரம் எடுத்த செய்தி (50)
6. குசனாபன் பெண்களைக் கூனாக்கிய செய்தி (64)
7. சிவபிரான் தலையில் கங்கையை அமர்த்தியிருக்கும் செய்தி(67)
8. சிவன் தன் உடலில் சமபாகமாகப் பார்வதியைக் கொண்டிருப்பது[4] (76)
9. திருமால் கடலைப் படுக்கை வீடாகக் கொண்டிருக்கும் செய்தி (68)
10. மன்மதனுடைய வில், கரும்பு, அம்பு மலர் என்ற செய்தி(111)
11. கருடன் பெரிய திருவடி, அனுமன் சிறிய திருவடி என்ற செய்தி[5] (137)
12. பரந்தாமன் மார்பில் இரத்தினம் உள்ள செய்தி (223)
13. சிவனுக்கு உரிய மலர் அருக்க மலர் என்ற செய்தி (335)

இவை போன்ற புராணச் செய்திகள் பெருமளவில் இடம் பெற்றுள்ளன.

புராணக் கதைகள்

புராணங்களில் காணப்படுகின்ற பல கதைகள் இந்நூலில் அதிக அளவில் கூறப்பட்டுள்ளன.

1. *முருகப் பெருமான் அசுரனையும், அரக்கனையும் வென்ற கதை (40)*
2. *திருமால் மோகினி (பெண் வடிவம்) யாக முன் செல்ல சிவன் பின்னில் தொடர்ந்து சென்ற கதை (50)*
3. *திருமால், பிரமன், சிவன் மூவரும் சேர்ந்து தீமை புரிந்த கதை (52)*
4. *நளாயினிக்காக இந்திரன் பூமிக்கு வந்த கதை (57)*
5. *துரோபதை பாண்டவர் ஐவருக்கும் உரிமை மனைவியாய் இருந்த கதை (58)*
6. *இரணியரேதன் ஏழு முனிவர்களின் மனைவியர்களை புணர்ந்ததால் உண்டான காயம் பற்றிய கதை (60-61)*
7. *அக்கினியை அக்கினி குமாரர் மருந்து போல் உண்ட கதை (62)*
8. *சிவபெருமான் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்த கதை (69)*
9. *துராசரன் புதனைப் புணர்ந்து பெற்ற புரூரவர் கதை (87)*
10. *தருமன் முதலாக சகாதேவன் ஈறாக பஞ்ச பாண்டவர் பிறந்த கதை (58)*
11. *சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்ட கதை (316)*[6]

கல்வியறிவில்லாத பாமர மக்களும் அறிந்திருக்கக் கூடிய இவைபோன்ற புராணக் கதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இதிகாசச் செய்தி

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசச் செய்திகள் இந்நூலுள் அதிகமாக இல்லை எனினும் மகாபாரதச் செய்திகள் சில மட்டும் இடம் பெற்றுள்ளன.

1. *பாண்டவர் ஐவரும் துரோபதையை உரிமைப் பங்காளிகளாக இருந்து அனுபவித்த செய்தி (58)*
2. *பாண்டவருள் ஒருவனான நகுலன் குதிரைகளைப் பழக்கி நடத்துவதில் வல்லவன் என்ற செய்தி (231) ஆகிய மகாபாரதச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.*

நூலில் பயின்றுள்ள இறைவரின் திருப்பெயர்கள்

இந்நூலில் சிவன், திருமால், பிரமன், சூரியன் போன்ற இறைவர்களின் பெயர்களாக அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாகச் சிவ பெருமானுக்கு மட்டும் பல பெயர்கள் வழங்குகின்றன. இதே போல் பிரமன், திருமால் போன்றவர்களுக்கும் பல பெயர்கள் வழங்குவதைக் காண முடிகின்றது.

சிவபெருமான் பெயர்கள்

அரன்(146), ஈசானர்(71), உருத்திரனார் (69), கண்ணுதலோன்(52), கூடற்பரமனார்(316), சாம்பனார்(44), சிவன்(127), பரமேசுரன்(143), புரகரன்(50), புராரி(48), புனிதர்(237).

திருமாலின் பெயர்கள்

அரி(43), கண்ணன்(76), கரியோன் (52), கோபாலன் (96), சேடன் (263), திருமார்பன்(228), நரசிங்க மூர்த்தி(276), நாராயணன்(275), பரந்தாமன்(223), புரந்தரனார்(57), பெருமாள்(132) மாயோன் (264), மால் (45), முரசுரன்(50), முராரி(47) அனந்தாள்வார் (136).[7]

பிரமன் பெயர்கள்

இரணியகர்ப்பன் (31), சரோருகபாதன் (236), பிரமன் (5), பிரமாதி(127), பூமன்(228), விதானார்(4), விரிஞ்சன்(297), வேதா(52).

மன்மதன் பெயர்கள்

அருவமதனன்(280), உருவிலி(4), காமவேள்(1), சிலை வேள்(72), போர்வேள்(1), மன்மதன்(70), மாரன்(76).

சூரியனின் பெயர்கள்

இரவி(233), கதிரோன் (144), பருதி(22), பிரபாகரிணி(227), முல்லைத்தாமன்(270).

இந்திரனின் பெயர்கள்

தேவேந்திரன்(319), புருகூதன் (227), வலாரி(76), வாசவன்(82).

சந்திரனின் பெயர்கள்

சந்திரன்(273), இரவன்(95).

மற்ற இறைவர், தேவர் போன்றோர்களின் பெயர்கள்

கரிமுகன்(30), செவ்வேள்(145), இராமன்(246), இலக்குவன்(246), பரதன்(246), காகுத்தன்(267), தருமன்(58), நகுலன்(231), சகாதேவன்(58), அரிச்சுணன்(273), அரிச்சந்திரன்(272), விசுவாமித்திரன்(80), துரோணன்(48), பிருங்கிருடி(168), பாரத்து வாசன்(77), பாண்டு (93), காலன்(61), கிருதாசிதரன்(284), புதன்(87), அக்கினி(62), பிரகற்பதி(154), அனுமன்(136),குசனாபன்(65), குபேரன்(66), சிரசுதரன்(51), புரூரவர்(88), சுரன்(40), முரன் (40), வாணாசுரன்(45), அமரேசர்(26), அனுருத்தன் (45), வருணன்(64), இக்குவாகுத்தன்(74), சந்தனு(85) என்பனவும் குறிக்கப்பட்டுள்ளன.

இறைவி, மற்றவர் பெயர்கள்

கிரிசை (66), திரு(41),சரசுவதி(34) என இறைவியின் பெயர்களும், இந்திராணி(271), இரதி (218), சுகேசி(78), செந்தனு(85) துரோபதை(58), திலோத்தமை(332), நளாயினி(57), மாத்திரி (92), மோகினி(50) என்றும், அரம்பை(82), ஊருவசி(88) என தெய்வலோக ஆடல் மகளிரின் பெயர்களும், தாடகை(190) எனும் அரக்கியின் பெயரும் காணக் கிடக்கின்றன.

நூலில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகள்

எந்த ஒரு இலக்கியத்திலும் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகள் உள்ளடங்கி இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த இலக்கியம் படித்து இன்புறுவதற்கும், ஆராய்ச்சிக்கும் பயனுள்ளவையாக அமையும்.

அந்த அளவில் இந்நூலிலும் பாட்டுடைத் தலைவனைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகள்

இந்நூலும் பாட்டுடைத் தலைவனுடைய பெயர் இனம், சமயம், வீரம், கொடை, ஆட்சி முறை, நாட்டெல்லை, உருவப் பொலிவு போன்ற பல செய்திகள் விரிவாகத் திரும்பத் திரும்பச் சொல்லப் பட்டுள்ளன.

பெயர்

1. *தெரிசொற் றமிழ்நார சிங்கமகி பாலன் (134)*
2. *நரசிங்க ராசனென நானிலங்கொண்டாட (245)*
3. *ராம னரசிங்க மன்னனென வந்தோன் (247)*
4. *அருந்தமிழ் நாரசிங் கப்பயன் (247)*
5. *தரும்தரு நாரசிங்க சல்லாபன் (248)*
6. *வராக கிரியரன் வணங்குநர சிங்கர் (266)*
7. *அரிச்சந்திர னரசிங் கப்பய ராசன் (272)*
8. *அரிச்சுன னாரசிங் கப்பய ராசன் (273)*
9. *திருவளர் மானர சிங்க நரேசன் (274)*
10. *அரவிந்த லோசனனா நரசிங்கன் (274)*
11. *துரைநர சிங்கத் துரந்தரன் (275)*
12. *நரநாரா யணநாம நரசிங்கர் (275)*
13. *பெருமை நரசிங்கர் (338)*

என்று 13 இடங்களில் பாட்டுடைத் தலைவனுடைய பெயர் குறிக்கப் பெற்றுள்ளது.

இனம்

இந்நூலினுள் பாட்டுடைத் தலைவருடைய இனத்தைப் பற்றிய செய்திகள் இல்லை. இவ்வேட்டுச் சுவடியின் முகப்பில் எழுதப்பட்டுள்ள,

'கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன்'

என்பதைக் கொண்டு இவர் நாயக்க வமிசத்தைச் சேர்ந்தவர் என அறியலாம்.

சமயம்

பாட்டுடைத் தலைவரின் தந்தை 'மீனாட்சி சுந்தரேசுபரருக்கு கோயில் கட்டி' வழிபட்டதாகத் தெரிகிறது.[8]

'வராக கிரியரன் வணங்குநர சிங்கர்'

என்ற 266-ஆம் கண்ணி வரி மூலம் பாட்டுடைத்தலைவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என அறிய முடிகிறது.

'பரசிய கோதைப் பதிவாழ் கதிரி
நரசிங்க மூர்த்தியை நாளும் பணிவோன்'

என 276-ஆம் கண்ணியினால் திருமாலையும் வழிபட்டவராகக் காண முடிகிறது.

வீரம்

'மிருகா பதிபோலும் வீரம்'

என்ற 243-ஆம் கண்ணி வரியிலும்

–'மாற்றார்
பரியெல்லாம் பஞ்சைப் பரியென்ன வெட்டிக்
கரியெல்லாம் வெந்த கரியாய்த்துப் பாக்கித்
திரிவாய்க் கிரையிட்டு'

எனும் 255-256-ஆம் கண்ணிகளாலும் பாட்டுடைத் தலைவர் மிகுதியான வீரம் படைத்தவர் என்பது புலனாகின்றது.

'இரண களமெல்லா மென்புந் தடியும்'

என்ற 258-ஆம் கண்ணி முதலாக 'கருங்கூற்று வாணன்' எறன்ற 263-ஆம் கண்ணி வரையிலும் இவருடைய வீரமும், போர்க்கள நிலையும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

கொடை

தன்னை நாடி வரும் பரிசிலர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் மலை போல் பரிசு வழங்கும் வள்ளல் தன்மை உடையவராக பாட்டுடைத் தலைவர் விளங்கினார் என்பது,

'குரிசி லுடைய குலோத்துமன் மேருப்
பரிசி லுதவும் பயோநிதி'

என்ற 226-ஆம் கண்ணியாலும்,

'விரையும் பசுந்தமிழும் வெண்சங்கும் செந்தேன்
நிரையு நிரைதரு தென்கண்ணி வேந்தன்'

என்ற 237-ஆம் கண்ணியினாலும் இம் மன்னன் கொடை வழங்குவதிலும் வரிசை தவறாமல் முறையாக அனைத்துப் பொருள்களையும் அளிப்பவன் என்பது புலனாகின்றது.

இவ்வேந்தன் தன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் சிறு குழந்தைகளுக்கும் பட்டாடை, சுட்டி போன்றவைகளை அளித்துக் கொடைத் தன்மையில் சிறந்து விளங்கினான் என்பது,

'விருத்தி யிளஞ்சிறார்க் கெல்லாந் தரித்த
அரைஞாணுஞ் சுட்டியும் பட்டாடையும் நல்கி'

என்ற 269-ஆம் கண்ணியின் மூலம் தெரிகிறது.

ஆட்சி முறை

இவருடைய ஆட்சியில் மக்கள் எவ்விதப் பயமும் இல்லாமல் அமைதியாக வாழ்ந்தனர் என்று தெரிகிறது.

'கரிணிபடப் போர்செயக் கருதலரில் லாமற்
பரணியொழித் தெல்லாபிர பந்தமுங் கொண்டோன்'

என்ற 238-ஆம் கண்ணியினால், இம்மன்னனை எதிர்த்துப் போர் செயவதற்கு பகைவர்கள் மனத்தாலும் கருதவில்லை என்று புலவர் பாராட்டியிருப் பதிலிருந்து தெரிய வருகிறது.

இவர் மறை நெறிப்படி வாய்மை தவறாமல் ஆட்சி புரிந்தார் என்பது,

'அருமறை வல்லதா னாபதி வாய்மை
பெருகு வளமைப் பிரதானி'

என்ற 249-ஆம் கண்ணி மூலம் புலனாகின்றது.

தன்னுடைய ஆட்சிப் பகுதிகளில் தனக்கு உதவியாகச் சிலரை நியமித்து ஆட்சி புரிந்தார் என்ற செய்தி 253-254-ஆம் கண்ணிகளில் விளக்கப் பட்டுள்ளன. இப்பாட்டுடைத் தலைவனின் ஆட்சி முறை பற்றிப் பல இடங்களில் விளக்கப்பட்டுள்ளது.

இவனுடைய ஆட்சியில் போர்ப் படையின் தொகுதி அதிக அளவில் இருந்தது என்பது,

'இராணுவங்கள் முந்தையிலு மெண்மடங் கென்ன'

என்ற 270-ஆம் கண்ணியினால் தெரிகிறது.

நாட்டெல்லை

-'மாங்கரை தேற்றூர் இறைசைப்
புரவலன் அடம்ப நாடு புரப்போன்'

எனும் 265-ஆம் கண்ணி மூலம் இவ்வூர்கள் கடம்ப மரம் மிகுதியாக அமைந்து பாதுகாவலை உடைய எல்லைகளாக இருந்ததை அறிய முடிகிறது. திண்டுக்கல் சீமையைச் சேர்ந்த 18 பாளையப்பட்டுகளுக்கும் இவர் பெரிய பாளையப்பட்டு[9] என புறச் செய்தியாக வரலாற்று நூல்கள் குறிப்பிடுவதினால் நாட்டெல்லை பரந்து விரிந்து இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

உருவ அமைப்பு

இந்நூலில் பாட்டுடைத் தலைவரின் உருவ அமைப்புப் பல கண்ணிகளில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

மணவாளன், மாதுரியரூபன்(27), திவ்விய சொரூபன்(230) என அழகைப் பற்றிக் கூறி, பிரபாகரன், பேகன் (227), பூமன்(228), மனோசன் (229), இராமன், பரதன், இலக்குவன்(246), சந்திரன்(272), அரிச்சந்திரன்(272), அரிச்சுனன்(273) போன்றோருடன் உவமிக்கப் பெற்றுள்ளார்.

'மருளும் திருவழகு வாய்த்தவன்' என 244-ஆம் கண்ணியில் இவனுடைய அழகைப் பற்றியும், 'திரள்புயன்' என 265-ஆம் கண்ணியில் இவனுடைய புய வலிமை பற்றியும் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து, இம்மன்னன் நல்ல உருவ அமைப்பையும், கவர்ச்சியான தோற்றத்தையும் உடையவனாக இருந்திருக்க வேண்டும் என்று புலனாகின்றது.

உறவினர்

பாட்டுடைத்தலைவரின் உறவினர்கள் என்று இந்நூலில் எவ்விடத்திலும் சான்றுகள் அறிய முடியவில்லை.

இவரது தந்தையின் பெயராக மட்டும்

'தெரியலர் போற்றுசெய சின்னக் கதிரன்'

என 241-ஆம் கண்ணியினால் அறிய முடிகிறது. இதே செய்தி புறச் செய்தியாகவும் சான்று கிடைக்கிறது.[10]

பிற வரலாற்றுச் செய்திகள்

இந்நூலிலுள்ள பிறவரலாற்றுச் செய்திகளாகச் சிலவற்றைக் காண முடிகிறது.

ஊர்ப் பெயர்கள்

மாங்கரை, தேற்றூர், இறைசை (265), சிதம்பரம் (54), பொதியை(29), சேது(41), வரராசை(182),வராககிரி(266), கூடல்(316) என்ற ஊர்ப் பெயர்கள் சில இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இவ்வூர்ப் பெயர்கள் யாவும் இன்றும் உள்ளவைகளே. ஒரு சில ஊர்ப் பெயர்கள் இலக்கியப் பெயர்களாக சுட்டப் பட்டுள்ளன. சான்றாக,

'இராமேசுவரம்' என்பது சேது என்றும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 'சங்கரன் கோவில்' என்று தற்போது வழங்கும் ஊர் வரராசை என்றும், 'மதுரை' என்பது கூடல் என்றும், 'பன்றி மலை' என்பது வராககிரி என்றும் நூலினுள் அக்கால இலக்கியப் பெயர்களாக காணப்படுகின்றன.

ஆட்சியாளர்கள்

இவ்வேந்தனுக்கு உதவியாகச் சிறுசிறு பகுதிகளை இவர் தலைமையின்கீழ் அரசாண்டு வந்தவர்களாக, சில இனத்தவர்கள் இந்நூலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளனர்.

புலவரின் பா நயமும், வளமடலின் யாப்பும்

இந்நூலில் இன்பச்சுவை ததும்பும் கருத்துக்களைப் புராணத்தோடும் தத்துவத்தோடும் ஒப்பிட்டிருப்பதிலிருந்து புலவரின் பா நயத்தினை அறியமுடிகிறது.

வளமடல் இலக்கியம் தனிச்சொல் இல்லாத இன்னிசைக் கலிவெண் பாட்டால், தலைவன் பெயர்க்கு எதுகை அமையப் பாட வேண்டும் என்ற பாட்டியல் நூல்களின் இலக்கணப்படி இவவள மடல் இலக்கியத்தையும் இயற்றியுள்ளார். அடிதோறும் முதலில் நிரையசையால் தொடங்கும் சிறப்பைக் காண முடிகிறது.

பா முழுவதிலும் எவ்விடத்திலும் இன்னிசைக் கலிவெண்பாவிற்குரிய ஓசையோ, தளையோ கெடாமல் அமைத்திருக்கும் சிறப்பினையும் காண்கிறோம்.

நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்

வருணனைகள்

இந்நூலில் காம இன்பத்தைப் பற்றிய செய்திகளைத் தத்துவத்துடன் இணைத்து வருணித்துள்ளார். (101 - 108).

தலைவன் சிறப்பு, உருவப் பொல்வு பற்றிய வருணனைகள் இடம் பெற்றுள்ளன. (226-276)

தலைவியைப் பற்றிய வருணனைகளில் காமவின்பத்தையும் இணைத்து 280 முதல் 315 வரையுள்ள கண்ணிகளில் விளக்கியிருக்கிறார். பாட்டுடைத்தலைவனுடைய வீரத்தைப் பற்றியும், போர்க்களத்தின் நிலை பற்றியும் கூறுமிடத்தில் கற்பனைக்கு அதிகமாகப் புகழ்ந்து வருணித்துள்ளார் எனத் தெரிகிறது.(256-263)

உவமைகள்

இந்நூலில் பயின்றுள்ள உவமைகள் மிக எளிமையானவைகளாக அமைந்துள்ளன. அதே சமயம் படிப்பவர்கள் செய்திகளை எளிதில் புரிந்து கொள்ளக் கூடியனவாகவும் உள்ளன.

1. *கரமண் பிசைந்து கடாதிகள் செய்வோன்போல் (5)*
2. *கன்றின் கொறுப் போல் (20)*
3. *தண்ணீரைப் போல் பருதி குளிரும் (22)*
4. *உரக்கால் பயிர்போல் (79)*
5. *பருபதம் போல் உடம்பு (86)*
6. *வெருகு கவராது வைத்த வெண்ணை போல் (117)*
7. *திருநீற்று ரேகையன்ன செவ்வேள் (145)*
8. *மழையிலாச் சேறு போல் (148)*
9. *சரகங்கள் தேன்கூட்டும் தன்மை போல் (199)*
10. *கரதலத்து நெல்லி போல் (207)*
11. *கருகாமை யூர்ந்து வரும் கட்டம்போல்(195)*
12. *பெருத்த அறிவென்பது போல் பேரின்பம்(213)*
13. *அரவுரித்த தோல்போல்(220)*
14. *பரந்தாமன் மார்பில் அரதனம் போல் (223)*
15. *பெருகு கனைகடல் போல் பேரெழில் (255)*
16. *குருவும் சீடனும் போல் இருளும் மதியும் (285)*
17. *இராகு விழுங்கு மதியன்ன முகம் (311)*
18. *எரிசாரம் புண்ணி விடுவதுபோல் (323)*

உருவகங்கள்

பாட்டுடைத் தலைவனின் பெருமைகளாகச் சிறப்பித்துக் கூறும் இடங் களிலும் (226-236), ஆண்,பெண் காம உணர்வுகளை இறைத் தத்துவத்தோடு ஒப்பிட்டுக் கூறும் இடங்களிலும் (106-108), உருவக அமைப்புக்களைக் காண்கிறோம்.

இம்மன்னனுடைய வீரத்தைச் சிறப்பித்து,

–'வில்லுக் கிவனே
அரிச்சுன னாரசிங் கப்பய ராசன்' - (273) என்றும்,

வாய்மையைச் சிறப்பித்துக் கூறும்.

'அரிச்சந் திரனரசிங் கப்பய ராசன்'

என 272-ஆம் கண்ணியிலும் உருவக அமைப்புகளைக் காண முடிகிறது.

பழமொழி

'வரைத்தேன் கரத்திருக்க வன்கிஞ் சுவரையைக்
கரைத்துக் குடித்தல்'

என 216-ஆம் கண்ணியில் பழமொழியைக் கையாண்டிருப்பது காண்கிறோம்.

மொழிநடை

பிற்காலச் சிற்றிலக்கியங்களில், புலவர்களின் மனப்போக்கு, பேச்சு வழக்கு, வாழ்விட அமைப்பு போன்றவற்றிற்கு ஏற்ப மொழி நடை அமைந்து விடுகின்றன எனலாம். இந்நூலாசிரியர் பேச்சு வழக்குச் சொற்கள், இரட்டைச் சொற்கள், வட சொல்லாட்சி போன்றவற்றைக் கையாண்டிருக்கிறார்.

பேச்சு வழக்குச் சொற்கள்

காய்ச்சு, தோச்சு (19), தித்திப்பு(12), மெச்சும்(25), சொள்ளை(86), நீச்சு (109), சக்களத்தி(121), கேள்க்கும்(154), மோட்டு(170), உண்டை(259) என்பன போன்ற பேச்சு வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

இரட்டைக் கிளவி

விருவிரு(12), தளதள (21), குருகுர்(53), சரச்சர(149) கரகர (151), போன்ற இரட்டைச் சொற்கள் நூலினுள் பயன் படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

வட சொல்லாட்சி

இந்நூலில் அதிக அளவில் வட சொற்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு இடத்தில் மட்டும் வடவெழுத்து பயின்று வந்துள்ளது.

செகம்(4), ஆசாரம்(8), சராசரம்(15), பிராணன், பிரமாணம்(16), அனுமானம்(17), சபா(25), புருடர், சரசம்(26), பிரீதி(28), சௌவுசம்(33), சிரோபதனம்(59), சலம்(94), பாதம்(98) சத்தலோகம்(102), சாலோகம்(106), சாமீகம், சாரூபம்(107), சாயுச்சியம்(108), பூர்வம்(153), சேத்திரம்(161), பரியாசம்(198), உபதேசம்(222), பிரதானி(249), பரிசாரம்(323) என்பன போன்ற வட சொற்கள் மிகுதியாக இடம் பெற்று இருப்பதைக் காணலாம்.

'ஆஸ்த்தி' (330), என்ற வடவெழுத்து ஓர் இடத்தில் மட்டும் பயின்று வந்துள்ளது.

பிறமொழிச் சொற்கள்

ராசா(254), துரை(275), தாவா(293), என்பன போன்ற பிறமொழிச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

சமுதாயப் பழக்கவழக்கங்கள்

இலக்கியம் என்று எடுத்துக் கொண்டால், அவ்விலக்கியம் தோன்றிய காலத்துச் சமூகத்தில் நிலவும் பழக்க வழக்கங்களையும், மக்களின் வாழ்க்கையையும் அவை குறிக்காமல் போவது இல்லை என்றே கூறலாம்.

மக்கள் சமுதாயத்தில் நிலவி வழங்குகின்ற தொழிலோடு சம்பந்தப்பட்ட சில குலத்தின் பெயர்களாக, வண்ணான்,[11] நாவிதர்[12] போன்ற குலப் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சில மாவட்டங்களில் தெலுங்கு மொழி பேசும் கம்மவார்[13] என்ற நாயுடு சாதியையும், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இராவுத்தர்[14] முகமதிய இனத்தையும், சூத்திரர்[15] என்ற அரிசன சாதியையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமூக வாழ்வில் ஆண்,பெண் காமவின்பச் சேட்டைகளைப் பற்றியும் அதனால் ஏற்படும் பல விளைவுகளைப் பற்றியும்[16] மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சமூகத்தில் பரத்தையர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பொருளுக்காக எதையும் செய்வார்கள்[17] என்ற செய்தி சுட்டப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து பரத்தையரை நாடிச் செல்லும் ஆண்கள் அக்காலத்திலேயேயும் இருந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

தாலி கட்டிய உரிமை மனைவி இருக்கும் போது வைப்பாட்டியையும் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தும் வழக்கம் இருந்திருக்கிறது.[18] பாட்டுடைத் தலைவன் பரிவாரங்களோடு வலம் வருதல் உண்டு; பெண்கள் கையில் அணியும் தங்கச் சரி என்ற அணியும், கடகம் என்ற அணியும், சவடி என்ற கழுத்திலணியும் அணி வகையும், காதிலணியும் வண்டில் கடுக்கன் என்ற அணியும், கைவளை என்ற அணியும் அணிந்திருக்கின்றனர்.[19]

பிற செய்திகள்

தமிழ்-(காப்புச் செய்யுள்), சொற்றமிழ்(133), பசுந்தமிழ் (237), அருந்தமிழ் (247) என மூன்று இடங்களில் தமிழைப் பற்றிச் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ளன.

கிரகங்களைப் பற்றி 156-ஆம் கண்ணியிலும், 311-ஆம் கண்ணியிலும் சுட்டப் பட்டிருப்பதிலிருந்து இந்நூலாசிரியருக்கு வானவியலில் அனுபவம் உண்டு எனக் தெரிகிறது.

160-ஆம் கண்ணியில் இராசிகள் பன்னிரண்டு என்றும், 161-ஆம் கண்ணியில் கரணம், திதி, வாரம், யோகம் என்று குறித்திருப்பதிலிருந்து இப் புலவருக்கு சோதிடத்திலும், பஞ்சாங்கத்திலும் கூடப் பயிற்சி உள்ளவர் என்று அறிய முடிகிறது.

மனித உடலில் எற்படும் நோய்களைப் பற்றியும்,[20] நோய் போக்கும் மருந்துகளின் வகைகள் பற்றியும்[21] தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளதிலிருந்து இந்நூலாசிரியர் மருத்துவத் துறை பற்றியும் முதிர்ந்த அறிவு வாய்க்கப் பெற்றவர் எனத் தெளிவாகின்றது.

ஆண், பெண் காமவின்ப உணர்வுகளை இறை நிலையோடு தத்துவப் பொருளில்[22] எடுத்துக் கூறியிருப்பதிலிருந்து தத்துவத்திலும் முதிர்ச்சி பெற்றவர் என்று தெரிகிறது.

இது போன்ற செய்திகள் இன்னும் பல இந்நூலில் பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

முடிவுரை

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று இவ்வள மடல். இந்நூல் சிற்றிலக்கிய இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்களின் இலக்கணத்திற்குச் சிறுபான்மை ஒத்தும் பெரும்பான்மை ஆசிரியர் போக்காககவும் அமைந்துள்ளது. காலச் சூழலுக்கு ஏற்ப இயற்றப்பட்ட நூலாகக் காணப்படுகிறது.

நூலாசிரியரும் பாட்டுடைத் தலைவரும் ஒரே இடத்தைச் சார்ந்தவர்கள் ஆதலின் அவ்விடத்து மக்கள் வாழ்க்கைக்கு ஏற்ப வழக்குச் சொற்களும் மொழி நடையும் அமைந்துள்ளதைக் காணுகிறோம். உயர்ந்த இலக்கிய நடை என்று கூறுவதற்கு இல்லை. ஆயினும், சிறந்த இலக்கியப் போக்கும் அக்காலச் சூழ்நிலையை அறிதற்குரிய வரலாற்றுச் செய்திகளும் நிரம்பிய ஒரு நல்ல சிற்றிலக்கியம் என்று கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1. திருக்குறள் - பா.1196.
2. 23-அம் கண்ணி.
3. அடைப்பிலுள்ள எண்கள் கண்ணிகளைக் குறிக்கும்.
4. 'பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்' திருவாசகம்-திரு அம்மானை. பா.எண்.8.
   'பெண்ணுடல் பெற்ற சென்னியம் பிறைபோன்' கல்லாடம்; செ.எ.ண.41 -வரி.38.
5. கருடன் பெரிய திருவடி என்பது வைணவ மரபு என உ,வே.சாமிநாதையர் குறித்திருக்கிறார். அழகர் கிள்ளை விடுதூது - நூல்ராய்ச்சி பக்.27.
6. மண்சுமந்து கூலிகொண்டக் போவால் மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானை' - திருவாசகம்; திருஅம்மனை பா.எண்.8
7. அனந்தாழ்தவார் என்பது திருமாலுக்குரிய பெயர். இது வைணவ மரபு என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் குறித்துள்ளார். அழகர் கிள்ளை விடுதூது - நூலாராய்ச்சி; பக்.27.
8. கன்னிவாடி பாளையக்காரர் அப்ப நாயக்கன் வமிசாவளி (சுவடி).
9. மதுரை நாயக்கர் வரலாறு; பக்.377.
10. கன்னிவாடி பாளையகாரர் அப்ப நாயக்கன் வமிசாவளி.
11. 119-ஆம் கண்ணி,
12. 120-ஆம் கண்ணி.
13. 253-ஆம் கண்ணி.
14. 24, 254-ஆம் கண்ணி.
15. 201-220 வரையுள்ள கண்ணிகள்.
16. 100-101-ஆம் கண்ணிகள்.
17. 121-ஆம் கண்ணி.
18. 250-255 வரையுள்ள கண்ணகள் .
19. 186-188 வரையுள்ள கண்ணிகள்.
20. 163-164-ஆம் கண்ணிகள்.
21. 179-181 வரையுள்ள கண்ணிகள்.
22. 105-108 வரையுள்ள கண்ணிகள்.

வளமடல் சுவடி

பத்து அங்குல நீளமும் இரண்டு அங்குல அகலமும் உடைய இவ் ஏடு, பதினெட்டு ஓலைகளையும், 35 பக்கங்களையும் உடையது. இதன் ஒவ்வொரு பக்கமும் பத்து வரிகள் உள்ளன. ஒவ்வொரு வரியிலும் ஒரு கண்ணி முடிகிறது.

எழுத்துக்கள் சிறியனவாக உள்ளன; ஆயினும் தெளிவாகப் புரியும்படி அமைந்துள்ளன. சில இடங்களில் ஓரிரு எழுத்துக்கள் வேறுபாடு காண முடியாமல் ஒன்று போலவே எழுதப்பட்டுள்ளன.

சான்றாக, ர-ற எவ்வித வடிவ மாற்றமும் இல்லாமல் எழுதப்பட்டுள்ளது.

(அ) ஒற்று எழுத்துகளுக்குப் புள்ளி இல்லை.

சான்று:- 30-ஆம் கண்ணியில், 'காமபாம' என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனை,

காமபரம்	காமபாம்
கரமபரம்	கரமபாம்
காம்பரம்	காம்பாம்
கரம்பரம்	கரம்பாம்

என்று பல சொற்களாகப் பிரிக்க முடியும். ஆயினும், காம்பரம் என்பதுதான் சரியான சொல்லாகும்.

(ஆ) குறில், நெடில் வேறுபாடு அறிய ஒற்றைச் சுழி இரட்டைச்சுழிக் கொம்புகள் பயன் படுத்தப்படவில்லை.

சான்று:- 9-ஆம் கண்ணி

கொல (கோல்), பொவீா (போவீர்)

(இ) சொல்லோ, வரியோ இடையில் விட்டிருப்பின் '+' எனக்குறியிட்டு கீழே இரு வரிகளுக்கு இடையில் அவை எழுதப் பட்டுள்ளன.

சான்றாக, இவ்வளமடலின் 286-ஆம் கண்ணி,

'இருளு மதியுஞ்சார்ந் திருப்பது கண்டேன்' என்ற வரி விடுபட்டு வரிகளுக்கு இடையில் எழுதப் பட்டிருந்தது. ஒரு எழுத்து மட்டும் விடுபட்டிருந்தால் '+' இக்குறி இல்லாமல் கீழே எழுதப்பட்டுள்ளது.

(ஈ) ஒரு எழுத்தை அடித்து விட்டு வேறு எழுத்தை எழுதுவதாக இருந்தால், அவை எழுத்தாணியாலேயே கீறப்பட்டுச் சிதைக்கப் பட்டுள்ளன,

இவ்வோலையில் செய்த ஒழுங்குமுறை

குறிப்பிட்ட கால அளவில் ஒருவரால் எழுதப்படும் சுவடி, பல கால கட்டங்களில் பல இடங்களில், பலரால் படி எடுக்கப்படும் போது பல

எழுத்துப் பிழைகள், சொல் மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இச்சுவடி, ஆசிரியர் சொல்ல மாணவர் எழுதியதாக இருக்கலாம்.

காலச் சூழ்நிலை, இடச்சூழ்நிலை, மனச்சூழ்நிலை போன்ற சூழ் நிலைகளின் காரணமாகவும், அறிவுத் தெளிவு இல்லாமையானும், பொறுமை இல்லாமையானும், பிணி மூப்பினாலும், படி எடுப்போரின் கவனக் குறைவினாலும் ஏற்பட்ட பிழைகளை நீக்கி மூல நூலாசிரியரின் உண்மைக் கருத்தை அறிதல் அவசியமாகின்றது.

(அ) பிழை நீக்கி எழுதுதல்:-

இச்சுவடி சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கலைக் களஞ்சிய பதிப்பாசிரியராக இருந்த திரு.ம.ப. பெரியசாமித் தூரன் அவர்களிடமிருந்து கி.பி. 1950-ஆம் ஆண்டு பெற்றதாக அரசினர் ஓலைச் சுவடி நூலகக் குறிப்பின் மூலம் தெரிய வருகிறது. இது மூலச் சுவடி அல்ல. படியே எழுத்துகள் சிறியனவாக இருந்தாலும் தெளிவாக உள்ளன. ஏட்டுச் சுவடி மிகப் பழமையானது, சில ஏடுகள் இராமபாணத்தால் அரிக்கப்பட்டும் உள்ளன.

இச்சுவடியின் அரசு நூலக எண். ஆர்.2413.
மக்கள் எவ்வாறு பேசினரோ அதே அமைப்பில் எழுதப்பட்டுள்ளது.
சான்றாக; ட்ள் ஆக எழுதல்
கேட்க என்பது கேள்க்க (154)[1] என்றும்,
ர்-ற் ஆக 'சொற்கம்' ,(104) எனவும்,

ரு-று ஆக 'பூருவம்' என்பது 'பூறுவம்' (153) எனவும் எழுதப்பட்டுள்ளது. இது ஆசிரியர் சொல்ல மாணவர் எழுதும்போது ஒலி முறையினால் ஏற்பட்ட தவறாக இருக்கலாம்.

சில சொற்களில் எழுத்து விடுபட்டும் உள்ளன.

சான்று:- துத்த (நி)மிளை (180) - நி எழுதப் படாமல் விடுபட்டுள்ளது.

(ஆ) இன்னிசைக் கலிவெண்பாவிற்கு ஏற்பச் சீர்களைப் பிரித்து எழுதியுள்ளேன்.

(இ) சில உட்தலைப்புகள் கொடுத்துள்ளேன்.

(ஈ) ஏற்ற இடங்களில் சந்தி பிரித்தும், மற்றவை படியில் உள்ளவாறே எழுதியுள்ளேன்.

சிதைந்துள்ள இடங்களில் - பலவற்றை ஆசிரியர் துணையுடன் நிரப்பியுள்ளேன்.[2] சில இடங்களில் என் அறிவிற்கு எட்டியவரை நிரப்பியுள்ளேன்.[3]

இச்சுவடியின் ஈற்றில் 338 கண்கள் என்று எழுதப்பட்டுள்ளன. ஆனால் ஒரு வரி அதிகமாக உள்ளது.

1. *அடைப்பிலுள்ள எண்கள் கண்ணி எண்களைக் குறிக்கும்.*
2. *91, 96, 100, 105, 117-118, 154, 168-169, 178, 185, 251, 270, 282, 322, 333, அடைப்புள்ள சிதைந்த பகுதிகள் ஆசிரியர் துணையுடன் நிரப்பியவை.*
3. *92,93,97,99, 102 - 103, 116, 295 ஆகிய அடைப்புள்ள பகுதிகள் என் அறிவுக்கு எட்டிய வரை நிரப்பப் பட்டவை.*

கன்னிவாடி

நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்

காப்புச் செய்யுள்

தேசம் புகழுநர சிங்கமான் மேற்றமிழின்
வாசம் பெருகு வளமடற்கு - நேசத்
திருப்பு வினாயகனைச் சித்திரத்துண் டாக்குங்
கருப்பு வினாயகனே காப்பு.

நூல்

தலைவியின் சிறப்பு - 1-26

1. சுரலோகம் போர்வே டுரந்தரிகஞ் சொல்க.
நரலோகங் காமவே ணாமமே சொல்க.

2. வுரலோக மாநாக லோகமத வேள்கால்
விரலூறு செந்தேனை வீழ்ந்தருந்தி வாழ்க.

3. புருடரையு மாதரையும் போரம்பாற் கூட்டி
யருடானி யுண்டாக்கு மாடலவே ணிற்கத்

4. திருவிலிகா ணீங்கள் செகக்கருத்தா வென்போன்
உருவிலியென் பீரே லுருவிவிதா னார்காண்

5. கரமண் பிசைந்து கடாதிகள்செய் வோன்போற்
பிரமன் படைப்பதவன் பின்னிருந்தோ கண்டீர்!

6. பரமேட்டி செய்துசெய்து பாரிலிடும் போது
பூதரைமேட்டில் வீழ்ந்தவரோ சப்பாணி கூனர்

காப்பு: தேசம் - நாடு; வாசம் - மணம்; நேசம் - அன்பு;

1. சுர்லோகம் - தேவர் உலகம்: போர்வேள் - மன்மதன் (காமப் போரை விளைவிப்பவன்) நரலோகம்-பூமி: நாமம்-பெயர்.
2. உரலோகம் - உரகலோகம்: உரகம் பாம்பு. நாகலோகம் - பாதாளலோகம்.
3. புருடர் - ஆண்கள், மாதர்-பெண்கள், போரம்பு - காமம், என்கிற மலரம்பு:
(வேள் - மன்மதன்)
4. திருவிலி - செல்வம் இல்லாமை; செகக்கருத்தா- உலகைப் படைத்தவன் (பிரமன்) உருவிலி-மன்மதன்.
5. கடாதி-மண் பானை, பொம்மை.
6. பரமேட்டி - பிரமன்; சப்பாணி - நடக்க முடியாதவன்.

7. இரதமுற மாத ரிதழமிழ்த முண்ணா
விரதமனுட் டித்ததுடலை விற்றுநோய் கொள்ளீவீர்.

8. அரியபிதி ராசார மாவசிகமென்று
தெரிய வுமக்குரைத்தாற் றேறிரோ கூறீர்.

9. கருவொழிய முத்திவழி காட்டவென்று வந்த
குருவுடைய பின்னேநீர் கோல்பிடித்தோ போவீர்?

10. தரியாது போவீரோ? தங்கிப்போ வீரோ?
ஒருகாதம் போனவுட னூர்மரங்காண் பீரோ?

11. அருகாத பேரின்ப மாறோ? குளமோ?
கருகாத வானந்தங் கைமண்டை வைத்துப்

12. பருகுவதோ? தின்பதோ? பார்ப்பதோ? தின்றால்
விருவிருப்போ தித்திப்போ மெய்யாகச் சொல்லுங்

13. கருக்கட்டா யங்கணர்கள் கையி லொருநாள்
தருப்பைபட்ட புண்கீரைச் சாறாய் ஒழுகிப்

14. பெருக்கெடுத்த தென்றுமந்தப் பேய்முனிவன் கண்டு
நிருத்தமிட்ட னென்றுமவ னித்தமிடும் போது

15. சராசரங்க ளாடத் தலைப்பட்ட வென்றும்
புராணங்கள் சொல்வதெல்லாம் பொய்யல வென்றெண்ணும்

16. பிராணனில்லாச் சத்தப் பிரமாணத் தோடே
குருவி யுடனிறகைக் கூட்டிலே கண்டோன்

17. உரியபுனன் மேன்மிதக்கு மோரிறகைக் கண்டு
குருவியுமிங் குண்டென்று கூறுமனு மானப்

18. பிரமாண முங்கொண்ட பெயர்கர டாய்பொற்
பரிகின்ற சேதாவின் பாலிருக்கக் கள்ளி

---

7. இரதம் - இனிமை; மாதர் இதழமிழ்தம் - பெண்களின் உதட்டில் சுரக்கும் நீர்; விரதம் - தவம்.

8. பிதிராசாரம் - இறந்தவர்குச் செய்யும் வேதக் கடன்கள்.

9. கரு - பிறப்பு; முத்தி - மோட்சம், வீடுபேறு.

10. தரியாது - தங்காமல்; காதம் - பத்துக்கல் தொலைவு.

11. அருகாத - குறையாத; கருகாதவானம் - கறுப்பு நிறமாகாத மேகம்; மண்டை - தலை.

12. பருகுவது - குடிப்பது; மெய் - உண்மை.

13. அங்கணர் - சிவபெருமான்; தருப்பை - குசைப்புல்.

14. நிருத்தம் - நடனம்;

15. சராசரம் - இயங்கு பொருளும் நிலைப்பொருளும், தலைப்பட்டது ஒன்று சேர்ந்து கலந்தது.

16. பிராணன் - உயிர்; சத்தப் பிரமாணம் - ஒலியளவை.

17. புனல் - நீர்; அனுமானம் - உய்த்தறிதல்.

18. சேதா - சிவப்புப்பசு கள்ளி - ஒருவகை முட் செடி.

19. சொரிகின்ற பால்காய்ச்சுத் தோச்சுக் கடையு
முருடர்கா ளோடி முயற்கோடு தேடுங்

20. குருடர்காள் கன்றின் கொறுப்போல் தகைக்கு
மரவுரியும் வெண்பொடியும் வன்புலியின் மேலுஞ்

21. சருகு மிளிப்பாய்த் தளதளென்ற பீதாம்
பரமும் பரிமளமும் பஞ்சணையும் விம்பா

22. தரமும் கசப்பானாற் றண்ணீரைப் போலே
பருதி குளிரும் பனிமதிசெந் தீயாஞ்

23. கரையாழு மம்பியெல்லாஞ் சும்மா மிதக்கும்
பரமனார் வாழுமிடம் பார்த்துவந்து சொன்னேன்.

24. மருமகனோ மகனோ மாமனோ சொல்வீர்
நரகமுங் காயக் கிலேசமு நன்றா

25. யுரையு நிரைபாரு மூராரைக் கேளுஞ்
சபியென்றா லென்னைச் சபாசென்று மெச்சும்.

26. அரசர் புருட னமரேசர் காந்தன்
சரசமட வாரையெலாந் தானே புணரும்

தலைவன் தலைவியைப் புகழ்தல் 27-224

27. வரிசை மணவாளர் மாதுரிய ரூபன்
விருது மதன்படைத்த வீறுசில கேளீர்

28. துரிதமத யானை கற்றிவிளை யாடப்
பிரிதிவியி னட்ட பெரியதம்ப மேரு

29. வரமுனி வாழ்பொதியை மாமலைதேர் முட்டி
முரசுகள் வைத்தடிக்கு முற்றவெளி பூமி

---

19. சொரிகின்ற - பொழிகின்ற; தோச்சுக்கடைதல் - உறைய வைத்துக் கடைதல்; முரடர் - அறிவில்லாதவர்.
20. மரவுரி - மரப்பட்டை; வெண்பொடி - திருநீறு.
21. பீதாம்பரம் - பொன் ஆடை; பஞ்சணை - பஞ்சு மெத்தை.
22. தரம் - மேன்மை; பருதி - சூரியன்; பனிமதி - குளிர்ச்சி பொருந்திய சந்திரன்.
23. பரமனார் - கடவுள்.
24. நரகம் - உயிர்கள் தீவினைப்பயனை அனுபவிக்கும் உலகம்; காயக்கிலேசம் - உடலை வருத்தி ஒடுக்குதல்.
25. நிரை - மாட்சிமை; சபாசு - சபாஷ், மிகநன்று
26. அமரேசர் - தேவர்; காந்தன் - கணவன்; சரசமடவார் - இனிய காமச் சேட்டையுள்ள பெண்கள்.
27. வரிசை - ஒழுங்கு; மாதுரியரூபன் - இனிமையான உருவத்தை உடையவன்; வீறு - சிறப்பு (பெருமை).
28. பிரிதி - விருப்பம்; தம்பம் - தூண்; மேரு - மேருமலை.
29. வரமுனி - அகத்திய முனிவர்; பொதியை - பொதிய மலை.

30. குரு (மணி)க்கா வெல்லாங் குதிரைகட்டும் பந்தி
கரிமுகன் கார்முகந் தாங்கிவருங் கையான்

31. பரசமய கோளரிப ராக்கிரமங் கேளீ
ரிரணிய கர்ப்பனிருந் தெண்ணாமற் செய்த

32. வரணிய செய்தி சொன்னா லன்றுரைத்த வாயுஞ்
சுருதிபோற் கேட்டோர் துளைச் செவியுங் கூடக்

33. திருதசௌவு சஞ்செயினுங் கெட்டதுகூ டாது
கரசரண மெல்லாந்தன் கையினாற் செய்த

34. பிரசையோ நன்மாமன் பெற்ற மகளோ
சரசுவதி தான்றான் சமைத்த கறியை

35. யுருசிபார்த் தாற்றோட முண்டோவென் றெண்ணி
யரிசியு மில்லாம லைந்து வயதிற்

36. பரியமிட்டுக் கல்யாணம் பண்ணினர்போற் றீண்டக்
குரங்க வடிவமகள் கொண்டேகத் தானுங்

37. கருங்கலையா யோடிப்போய்க் கைகலக்க வேத்த
துரங்கனது கண்டு துரோகியென்று வாளித்

38. தரங்கா லரிந்த தலைகரந்து போய்விண்
ணரங்கி லெழும்மீனா யாறிரண்டு மீனின்

39. மருங்கிலே மான்றலையாய் வாழுங் கதையைச்
சுருங்கவுரைத் தேன்விரித்துச் சொன்னாலுந் தோடங்

40. கரனை முரனைவென்றோன் காதையொன்று சொன்னாற்
பொருமி யழுவீர் பொறுத்திருக்க மாட்டீர்

41. திருவையொரு நாட்பிரிந்து சேதுவிற்போய்க் கண்டு
பரிபவங்கள் செய்தலுமே பாண்டியனார் சுட்டிக்

42. குருதி குளிப்பித்துக் குத்திரஞ்செய் திட்ட
சுருவிலங்கு வெட்டிவிடக் கம்மியர்கை வந்தோர்

---

30. குருமணிக்கா - ஒளிபொருந்திய அழகிய சோலை; பந்தி - குதிரை கட்டும் இடம்; கரிமுகன் - விநாயகர்; கார்முகம் - வில்.
31. கோளரி - சிங்கம்; பராக்கிரமம் - வீரம்; இரணியகர்ப்பன் - பிரமன்.
32. அரணிய-காப்பான சுருதி - இசையொலி, வேதம்,
33. திருதசௌவுசம் - சுத்தம் செய்யப்பட்டது; கரசரணம் - கைபாதம்
34. பிரசை - சந்ததி.
35. உருசி - சுவை; தோடம் - பாவம்,
36. பரியம் - மணப்பரிசு; குரங்க வடிவம் - மான் உருவம்.
37. கருங்கலை - கரிய ஆண்மான்; ஏத்தல் - துதித்தல்.
38. வாளித்தரங்கு - வாள் போன்ற ஈட்டி; மீன் - நட்சத்திரம்.
39. மருங்கு - பக்கம்.
40. கரன் - அரக்கன்: முரன் - அசுரன்.
41. திரு - இலக்குமி, சீதை, சேது - இராமேசுவரம்; பரிபவம் - அவமானம்.
42. குருதி - இரத்தம்; குத்திரம் - வஞ்சகம்.

43. ஒருவரிலை யோகமா னுத்தார மில்லை
யரியார் மகனாற்கு மந்தவிதி வந்து

44. துரியோ தனன்மகளைச் சோரத்தாற் கூடித்
தரியா விலங்கொடு சாம்பனார் தேம்பப்

45. பிரியா திருக்குமால் பேரன்வேல் வீரன்
அரன்மகனைப் போல்வா னனுருத்தன் வாணா

46. சுரன்மகளைக் கூடியநாட் டொல்லவுண னிட்ட
கரையா முழுவிலங்கு கால்விங்கோ சொல்வீர்?

47. முராரி தலைமுறையார் மூன்றுந் தொடர்ந்து
விரோதமுறுங் காம விலங்குவிலங் காதோ?

48. புராரி சடைமுடியும் பொய்த்தவசுங் கேளீர்
துரோணன் மனையாள் துடையிலுடை வீழ

49. மருவிவிட்டாற் போற்கண்ட மட்டிலே காம
முருவிவிட்ட பால்போ லொழுகவிட்ட தென்னே!

50. முரசுரன் மோகினியாய் முன்செலப்பின் செல்லும்
புரசுரனை விற்சுரனாய்ப் போர்வே டுரத்த

51. வரியர புத்திரன்வந் தங்குதித்த வாறுஞ்
சிரகுதரன் வெட்டுஞ் சிலாலிகித மன்றோ?

52. சுரியோனும் வேதாவுங் சுண்ணுதலுங் கூடிப்
புரியாத தீமை புரிந்தசுதை சொன்னாற்

53. குரகுரென வாய்கழுவிக் கொப்பளிக்க வேண்டு
மரைசா லழகா மனசூயைக் கென்னு

54. முரைசற்றே கேட்டவரே யோடினாற் சும்மா
திரைதிறந்து காட்டாச் சிதம்பரமோ சோற்றுப்

---

43. அரி - திருமால்.

44. துரியோதனன் - திருதராட்டிரன் மக்களில் மூத்தவன்; சோரம் - வஞ்சனை, களவு; சாம்பனார் - சிவபெருமான்.

45. மால் - திருமால்; அரன் - சிவன்.

46. அவுணன் - அசுரன்

47. முராரி - திருமால்; விலங்கு - தளை,

48. புராரி - சிவன்: துரோணன் - குருகுலத்து அரசரின் வில்லாசிரியர்.

49. உருவி விட்ட - பீச்சிவிட்ட

50. முரசுரன் - திருமால்; மோகினி - திருமாலின் பெண் வடிவ அவதாரம். புரசுரன் - சிவன். வேள் - மன்மதன்.

51. அரிஅரபுத்திரன் - ஐயனார்; விசிகம் - அம்பு.

52. சுரியோன் - திருமால்; வேதா - பிரமன்; சுண்ணுதல் - நெற்றியில் சுண்ணையுடைய சிவபெருமான்.

53. அரை - இடை; அனசூயை - அத்திரிமுனிவர் மனைவி.

54. திரை - மறைக்கப்பட்டுள்ள திரைச்சீலை. சோற்றுப்புரை - உணவளிக்கும் அறை.

55. புரையி லதிதியராய்ப் போனவர்விட் டாரோ?
வரிவை நக்கினமா யன்னமி டுகென

56. விரையநடந் தோடினோர் மெல்லத் தவழ்ந்து
திரியச் சபித்தசுதை சின்னக் கதையோ?

57. விருந்தவஞ்சேர் நாளா யினியொருத்திக் காகப்
புரந்தரனா ரைவருமிப் பூமியிலே வந்து

58. தருமன் முதற்சாதே வனீறாய்ச் சனித்துத்
துரோபதையைத் தாயாதிச் சொம்போற்பங் கிட்டுச்

59. சிரோபதன மட்டுவர் சொந்தக் கதைதான்
பிரேளிகையோ? வீண்சுதையோ? பிச்சைக் கதையோ?

60. இரணி யரேத னெழுமுனிவர் சேருந்
தருணமட வாரையெல்லாந் தான்சேர்வான் கொண்ட

61. விரணமவன் தே விவிடி வித்திலளேற் போமோ?
பெருந்துதிசேர் காலனார் பெண்கொடியைக் காம

62. விருந்துபோ லுள்ளே விழுங்கிவைக்க வந்த
வருந்துதியா ரக்கினியை யக்கினிகு மாரர்

63. மருந்துபோ லுண்டகதை மாற்றுக் கதையோ?
நிருதிபெண்பேய் கொண்டகதை நீக்கிவிடு மப்பால்

64. வருணனொரு கும்பத்தில் வார்த்திடுங்கா மத்தி
லிருவர் பிறந்தகதை யின்றைக் கதையோ?

65. மருத்துக் குசனாபன் மாதரைக்கூ னாக்கி
யிருத்தியது காமப்பே யேறியதா லன்றோ?

---

55. அதிதி - விருந்தாளி; அரிவை - பெண்; நக்கினம் - அம்மணம், நிர்வாணம்; குழந்தையாமாறு - தவழ்ந்து திரிய; அன்னம் - சோறு.

56. சபித்தல் - சாபம் கொடுத்தல்.

57. நளாயினி - மௌத்கல்ய ருஷியின் மனைவி, கற்பின் திறத்தால் அற்புதம் செய்தவர்; புரந்தரன் - இந்திரன்.

58. தருமன் - பாண்டுவின் மூத்தமகன்; சாதேவன் - பாண்டுவின் இளைய மகன் சகாதேவன்; சனித்து - பிறந்து; துரோபதை - பாண்டவர் ஐவரின் மனைவி; தாயாதி - உரிமைப் பங்காளி; சொம் - சொத்து.

59. சிரோபதனம்-தலைபோல் பாதுகாத்தல்; பிரேளிகை-புரளி

60. ஏதன்-மூலகாரணன், கடவுள்; தருணம்-இளமை; மடவார்-மகளிர்.

61. விரணம்-காயம்; துதி-புகழ்; காலன்-இயமன்.

62. அக்கினிகுமரர்-அசுவினி தேவர்

63. நிருதி-அரக்கி.

64. வருணன்-உலகுக்கு நீரைக் கொடுக்கும் தெய்வம்; கும்பம்-குடம்.

65. மருத்து-காற்று;

66. கிரிசையை நோக்கியதே கேடாய்க் குபேர
னரிசிவந்த கண்பசந் தார்க்குங் கரியே!

67. தருப்பணா ரானை தலைமேற்கொண் டார்போற்
றிருந்தசடை மேலொருத்தி சென்றிருக்க மெய்யி

68. லொருத்தி பெண்ணுமாணு மொருசீலை யுடுத்துச்
சிரத்தை யுடனிருந்து செங்கோல் செலுத்த

69. வுருத்தினா ராஞ்சிலைவா ளொன்றிலையாங் கண்ணா
வெரித்தாரா மப்போ தெறும்பு கடித்து

70. மரித்தார்போன் மன்மதனார் மாய்ந்தாரா மெல்லாம்
பருத்தியா யிந்தப் பழங்கதைசொன் னோர்க்குத்

71. தரித்ததி காம்பரத்தை தானேயீ சானர்
விரித்து விரித்து வெகுமானஞ் செய்வார்.

72. வரிசிலை வேளை வளர்த்ததாய் சொந்தச்
சரிதை படித்தாற் றலைவெடித்துப் போமே;

73. இருமிசு னாவிற் கிளைக்குமே பாவம்
வருமுன் மதன மதனவென்று சொல்லு

74. மிருணமோதுஞ் சந்திரன்போ லிக்குவா குத்தன்
தருநூ றாம் பிள்ளையாந் தண்டனுமால் கொண்டு

75. வெருவாது சென்றொருநாள் வெள்ளி மகளைக்
குருமகளென் றெண்ணாது கூடினது பொய்யோ?

76. வுரவுநீர்க்குள் ளிருக்குமோர் மாரனடு கண்ணன்
பரவு புனலே படுக்கைவீடாய் வலாரி

77. வரவிடுத்த மாதருடன் வாழ்ந்த (துமக்) கச்சேர்
பரக்காதல் பூண்டொழுகும் பாரத்து வாச

---

66. கிரிசை-பார்வதி; குபேரன்-சந்திரன்; அரி-சுண்வரி; பசந்து-பசுமை நிறமாக மாறி
67. தருப்பணார்-சிவபெருமான்; சடை-தலை; மெய்-உடல்.
68. சீலை-துணி; சிரத்தை-அன்பு, நம்பிக்கை; செங்கோல்-ஆட்சி.
69. உருத்திகனார்-சிவனார்; சிலை-வில்.
70. மரித்தார்போல்-இறந்தார்போல; மன்மதன்-சாமன்; பருத்தி-பஞ்சு.
71. திகாம்பரம்-திசையாடை, நிர்வாணம்; வெகுமானம் - உபசரிப்பு.
72. சிலைவேள்-மன்மதன்; சரிதை-சரித்திரம்.
73. சுனா-சுனவு.
74. இருணம்-நீர்; மால்-ஆசை
75. வெருவாது-அச்சம் கொள்ளாமல்; வெள்ளி-சுக்கிரன்
76. உரவுநீர்-கடல்நீர்; பரவு புனல்-விரிந்து கிடக்கின்ற கடல் நீர்; வலாரி-இந்திரன்.
77. பரக்காதல்-மேலான தவநிலையுடைய அன்பு; பாரத்துவாசன்-துரோணாசாரியன் தந்தை.

78. னொருகாற் சுகேசியைக்கண் டோட்டை யுடம்பாய்
மரக்காலி லேயளந்து வைத்தகா மத்தில்

79. உரக்காற் பயிர்போ லுதித்த துரோணன்
வரக்காவ னப்பிறப்பை மைந்தனுக்குந் தந்தான்

80. விரசா தியைவிசுவா மித்திரன் வென்று
பருனாதி தின்றுதவம் பண்ணின கூத்தைச்

81. சிரியாது கேளுஞ் சிரிப்புவந்தான் முன்னோ
ருரியோ ரிறந்தோரை யுள்ளே நினையும்

82. வரம்பில் சபதங்கள் வாசவன்முன் கூறி
யரம்பை யெதிரே யருந்தவத்தை யொட்ட

83. விரும்பு தவத்தோனும் வெண்குட்ட நாயாய்த்
தரம்பெறாத் தேவ சபையிற்போய் நின்ற

84. பரும்படியைக் கண்டானம் பாறுவ தன்றோ
குரம்புகட வாப்பாவை கோசிப்ப தெல்லாந்

85. திரிபதகை செந்தனுவைச் சந்தனுச் சேர
விருபதுகை முப்பதுகை வேண்டியிடர் பூண்டு

86. பருபதம் போலுடம்பு பஞ்சசரம் பூத்துச்
சொரியுமாம் போன்றகதை சொள்ளைக் கதையோ?

87. இராசாதி ராச னிளனென்போன் பொன்னாய்த்
துராசாரன் போய்புதனைத் தோய்ந்துபெற்ற பிள்ளை

88. புரூரவா யூருவசி போகவ(தி)க் குள்ளா
யொரூரவா வெல்லா முளந்துளந்து தேய்ந்த

---

78. மரக்கால்-முகத்தலளவைக் கருவி.
79. மைந்தன்-மகன்.
80. விரசாதி - இழிந்த இனம்.
81. உள் - மனம்.
82. வாசவன் - இந்திரன்; பரம்பை - தெய்வலோக ஆடல் மகள்
83. வெண்குட்டம்-உடலில் வெள்ளையாகப் படரும் குட்ட நோய்;
தரம் - தகுதி; தேவசபை-இந்திரனுடைய சபை.
84. பரும்படி- கறிபதார்த்தங்களோடு அமைந்த அன்னம்; குரம்பு - எல்லை.
85. திரிபதகை-கங்கை; சந்தனு- வீடுமன் தந்தை; இடர் - துன்பம்.
86. பருபதம் - மலை.பஞ்சசரம் - மன்மதனின் ஐந்து மலரம்பு,
சொள்ளை -சொத்தை, பயனற்றது.
87. புதன் - வானவன்
88. புரூரவா-சந்திரவமிசத்து அரசருள் ஒருவன்; ஊருவசி-தேவலோக ஆடல்
மகளிரில் ஒருத்தி; போகவதி-போகத்தில் அனுபவமுள்ள பெண்.

89. சரீர மவளுலகந் தானடையச் செய்த
துருவைச் சுருக்கா தியல்லவோ தொல்லை

90. யிருபிறப்போ ரென்னேணிக் கிட்டநூ லேணி
நிரைவளைபாஞ் சாலி நிதம்பத் தடந் தான்

91. குருகுல வேந்தர் கு(டி)கெடுத்த தன்றோ?
விரலையு மானு மெனப்புணருங் கிந்த

92. நர (லை உலகம்) நடுங்கவிட்ட சாபம்
வரலை மறப்பித்த மாத்திரிதன் கொங்கை

93. யரணை பேணிப் பாண்டுவுட னன்றேசொன் னீரோ?
வருபொற் றுடையின் மரக்காலிற் கையிற்

94. கரகந் த(வறவிட்டு) வ(ரி)திற் கண்டமீன் வாயிற்
சுரத சலத்தைச் சொரிவார் பரிவார் •

95. குரவன் மகளைக் குருவென் றிறைஞ்சு
மிரவன் மகளைத்தா னீன்ற மகளைப்

96. பரவன்(மகளை)க்கோ (பாலன்) மக(ளை)
நிரவுங் குறமகளை நீசன் மகளை

97. மிருகங் (களாங்கணைந்து வேட்(கை த)ணிப்பா
ரருணங் கழுதைகிளி யானைமுத லாயோர்

98. திரண விடா (வித்தக) தேவதைகட் குண்டே
யிருடி களெல்லோரு மேந்திழையார் பாதம்

99. வருடி(க ளல்லவோ? மாதவரி லார்காண்
விரதமடை வித்தார் விரத்திதந்த பேருங்

100. கரத்(தமாய் வந்)ததெங்கே கைதிறந்து காட்டும்
பரத்தை யடையவென்றே பாடுபட வேண்டாம்.

---

89. இருபிறப்போர்-பார்ப்பனர்; சரீரம்-உடல்; துருவை-பார்வதி;
சுருக்கு-மடிப்பு, உருவுதடம்

90. நூலேணி-நூல்கயிற்றால் அமைத்த ஏணி; நிரைவளை-வரிசையாக
அமைந்த கை வளையல்; நிதம்பம்-அல்குல்.

91. குருகுல வேந்தர்-குருவமிசத்து அரசர்; இரலை-மான்;

92. நரலை-ஒலி; அரலை-கடல்; மாத்திரி-பாண்டுவின் இளைய மனைவி.

93. அரண்-கோட்டை.

94. கரகம்-கமண்டலம்; சுரதசலம்-காம நீர்.

95. இரவன்-சந்திரன்; குரவன்-குரு.

96. பரவன்-துதிக்கின்றவன்; நிரவும்-அழிக்கும்; நீசன்-இழிந்தோன்.

97. வேட்கை-காமவிருப்பம்; அருணம்-மான்.

98. திரணம்-அற்பம்; வித்தக தேவதை-கல்வித் தெய்வம்; இருடி-முனிவர்;
ஏந்திழையார்-அழகிய பெண்கள்.

99. மாதவர்-முனிவர்; வருடி-தடவி.

100. பரத்தை-பொதுமகள்

101. பொருத்து(வர) வேண்டாம் பொருள்கிடைத்தாற் போதும்
பரம பதம்வேண்டிற் பாவையர்தான் சேரு

102. மு(ரமாய) சத்த லோகமுமங் குண்டு
திரமாய் உமக்குச் சிவலோகம் வேண்டிற்

103. கரவா(து) (விரட்டிவிடுங் கரடையைப் போய்க் கேளு
மொருசொர்க்கம் வேண்டினா லொன்றுவட்டி கூட்டி

104. யிருசொர்க்க மாத ரிடைக்குமேற் பாருஞ்
சரியை மடவார் தமக்கேவல் செய்தல்

105. கிரியைவர் பா)தங் கிடைத்து வருடல்
திருவணையார் சையோகஞ் சேர்தலே யோகம்.

106. உரகபடஞ் சோதித் துணர்தலே ஞானம்
புரிவளை யார்மனையிற் போவதுசா லோகம்

107. இரவிலவர் பூவணைமே வேறுதல்சா மீபம்
அரிவையர்மே லாடவர்கீ ழாவதுசா ரூபஞ்

108. சரியேக போகமே சாயுச்சி யமல்லாற்
பராமரி சிக்கவெறும் பாழாய் வெளியாய்

109. நிரமய மென்பதிலே நீச்சுநிலைப் புண்டோ?
பரமாத்த மேபதரைக் குத்திப் புடைத்தாற்

110. கரமாத் திரந்தேயுங் கண்டதுநான் சொன்னே
னுரம்பெறு வில்வே ளுழுமுழவ னாகக்

---

101. பரமபதம்-இறைவன் திருவடி அடையும் நிலை, வீடுபேறு.
102. உரம்-அறிவு; சத்தலோகம்-ஏழு உலகம்;(பூலோகம், புவலோகம், சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம் என்னும் ஏழு உலகங்கள்). நிரம்-உறுதி.
103. கரவாது-கொடுணக்காமல்; சொர்க்கம்-தேவருலகு.
104. இரு சொர்க்கம்-மாதர் தனமும், அல்குலும்; இடை-இடுப்பு; கிரியைமடவார்-ஒழுக்கமுள்ள மகளிர்.
105. கிரியை-செயல், சையோகம்-சேர்க்கை.
106. உரகபடம்-பாம்பின் படம்(பெண்களின் அல்குல் பாம்பின் படமாக வருணிக்கப்பட்டுள்ளது); ஞானம்-அறிவு; புரிவளையார்-முறுக்கிய வளையல் அணிந்த மகளிர்; சாலோகம்-கடவுளுடன் ஓரிடத்து உறைந்து இருத்தல்.
107. பூவணை-மலர்ப் படுக்கை; சாமீபம்-கடவுளை அணுகியிருக்கும் நிலை; அரிவை-பெண்; சாரூபம்-கடவுளைப் போல் வடிவம் பெறுதல்.
108. ஏக்போகம்-சமஅளவிலான இன்பம்; சாயுக்சியம்-உயிர் கடவுளோடு ஐக்கியமாகும் நிலை; பராமரிசிக்க-ஆலோசிக்க.
109. நிரமயம்-நோயற்றது; பரமாத்தம்-கடவுள்.
110. வில்வேள்-கரும்பு வில்லை உடைய மன்மதன்.

111. கரும்பு மலருங் கலப்பைபுக மாகப்
பொருந்திய காவிவிழிப் பூவையர்செய் யாகச்

112. சுரந்திடு சுக்கிலங்கள் சோணிதங்கள் வித்தாய்
விரிந்த புவனம் வீரபோகம் விளையக்

113. கரந்த பதர்கண்டீர் காம மிழந்தோர்
பொருத்தமற வோடினதும் பொய்தானே! யானை

114. துரத்தினதும் பொய் தானே! யென்றுசுட்க வாத
முரைத்துத் திரிகின்ற வூதா ரிகடங்

115. கரத்தைப் பறித்தாடிக் காற்றிற் பறந்து
மொருத்தனு லோகா யுதன்மடவா ரின்பப்

116. பரமான (மொன்றே ப) சித்தவற் கூட்ட
விரைமானாப் பொய்க்கூழை யிச்சித்த பேய்கள்

117. கரைம(னாத்) துன்பக் கடல்கடப்ப தென்றே
வெருகுகவ ராதுவைத்த வெண்ணெய்போ னெய்போ

118. லி(ரவி)னிலெல் லாமுறியி லேறி யிருப்பீர்
கரியமயிற் பீலிகொண்டீர் காமச் சுரத்துக்

119. கருகா பனைவிசிறி யாகாதென் றாரோ?
வரியுறுபுற் பாயுடுத்து வண்ணான் குலத்துக்

120. கெரிபுழுவா னீரே யிருண்ட மயிரும்
நரையும் பறித்திடுவீர் நாவிதருக் கெல்லாம்

121. பிரிவுறு சக்களத்தி பிள்ளைகளோ தள்ளி
விரியவழி தூர்ப்பதெல்லாம் வெள்ளாட்டி யாயோர்

122. கருவிலு தித்தாலுங் கைவந் திடவோ?
பிரளயமாங் காற்றைப் பிடித்துக் கரகத்

---

111. காவிவிழி-கருங்குவளைமலர் போன்ற விழி; பூவையர்-பெண்கள்; செய்-வயல்.
112. சுக்கிலம்-இந்திரியம்; சோணிதம்-இரத்தம்; புவனம்-உலகம்.
113. பதர்-உள்வீடு இல்லாதவை.
114. வாதம்-தருக்கம்; ஊதாரி-வீண்செலவு செய்து திரிபவன்.
115. உலோகாயதன்-சார்வாகன், உலோகாயதமதவாதி.
116. பரமானம்-பரம அனம், மேலான உணவு ; விரை-வாசனை; இச்சித்தல்-விரும்புதல்.
117. கரை-எல்லை; வெருகு-பூனை.
118. உறி-பண்டங்கள் வைத்தற்குத் தொங்கவிடும் உறி; பீலி-தோகை.
119. வண்ணான்-ஆடை வெளுப்பவன்.
120. நரை-வெளுத்த மயிர்; நாவிதர்-அம்பட்டர்.
121. சக்களத்தி-மாற்றாளான மனைவி(சக கழுத்தி என்று அறிஞர்கள் கூறுவர்) வெள்ளாட்டி-வைப்பாட்டி.
122. கரு-கருப்பம்; பிரளயம்-வெள்ளம்.

123. தருமையுட னோட்டி யடைப்பவரைப் போலே
யொருசெண்டு மோரகட முங்கொண்டீ ருமக்குப்

124. பிரவஞ்ச மில்லையோ பின்னைமனை யேது
கரபாத் திரமேது கானற் சலத்தைப்

125. பருகவோ வந்தீர் பரப்பிரமம் போமோ?
வருமோநீ ரெப்படிக்காண் வந்தீர்சன் னியாசந்

126. தருவோனு நீருமுங்க டாயார் வயிறு
விரிய வெடித்தீரோ வில்விலுதித் தீரோ?

127. புருவநடு விற்சிவனைப் போலேவந் தீரோ?
பிரமா திகளுக்கும் பீந்தோ லுரியாத்

128. தெரிவை யரைவென்று சிதேந்திரிய ரான
குரவரே நீவீர் கொடுத்தமருந் தாய்நும்

129. மெருது பசுவி னிடுப்பைமு றியாமல்
அரிதசியைத் தீற்றுவமோ? வவ்வெருத்தின் குற்றிற்

130. செருகுவமோ? தெண்டைத்தா திட்டமாய்ச் சொல்லு
உரிச்சே மறன்றுழக்குச் சேதமு மன்று

131. வரிச்சேத மாய்ப் பசையி லாதசன்னி யாசந்
திரிச்சே தமுமென்னைச் சேதமுமாஞ் செய்தால்

132. வரிச்சே தமாயெழுதி வாசித்தீ ரானாற்
பெருமாள் போற்றண்டும் பீதாம்பரமுங் கொள்ளத்

133. திரிதண்டுங் காவியுங்கொள் சீயர்முழுப் பேயர்
சரிசரியாய்ச் சாரூபந் தான்பெறாப் போதே

134. விரசையும் வைகுந்த வீடுமிவற் கில்லை
தெரிசொற் றமிழ்நார சிங்கமகி பாலன்

---

123. அருமை-அபூர்வம்; செண்டு-குதிரைச்சவுக்கு; அகடம்-அநீதி.
124. கானற்சலம்-கானலில் தோன்றும் நீர்த்தோற்றம்.
125. பரப்பிரமம்-முழுமுதற் கடவுள்; சன்னியாசம்-துறவு நிலை.
126. விலா-மார்பின் பக்கம்.
127. பீந்தோல்-மேல்தோல்.
128. தெரிவை - பெண் (25 வயது முதல் 31 வயதிற்குட்பட்ட பெண்)
சிதேந்திரியர் - புலன்களை வென்றோர்.
129. அரிதகி-கடுக்காய்.
130. திட்டமாய்-நிச்சயமாக; உரி-தோல்; சேதம்-கேடு
131. வரிச்சேதம்-வரி பிரித்து எழுதுதல்.
132. தண்டு-கதாயுதம்; பீதாம்பரம்-பொன் ஆடை.
133. திரதண்டு-வைணவ சன்னியாசிகள் தாங்கும் முக்கோல்; சீயர்-பெரியோர்.
134. விரசை-விரசாநதி. வைகுந்த வீடு-திருமால் உலகம். மகிபாலன்-அரசன்.

135. புரிசத் திரமதிலிற் பூசுசுதை மண்போற்
திருமண் புனைந்துநெற்றி தேயுமையங் காரே

136. பரிபாடை பத்தொன் பதாம்பாடை தானோ?
வரவை யனந்தாள் வாரென்பீ ரனுமன்

137. கருடனென்றே கண்ணவிந்து போம்போற் பெரிய
திருவடிகள் சின்னத் திருவடிக ளென்பீர்

138. வரிப்போகத் திட்டி வடித்தகஞ்சி யின்பேர்
திருப்போன கச்சாறென் பீர்செய்தி கேளு

139. முரண்டகமின் னார்யோனி முத்திரையைப் பூண்டு
மிருண்டதிரு மாவடிகை யென்றுசொன்ன பாவந்

140. திரண்டிடுமுன் கொங்கைத் திருமலையி லேறி
யுருண்டிடு வை யென்றா லுந்திமடுத் தோய்ந்து

141. சரண்புக் கனந்த சயனம் பணியு
மொருவேடன் வந்தாலு முள்ளே கொடுபோய்த்

142. திருவேடம் பூட்டித் திருநீறு சாத்தி
யிருவேட னென்றினிமேற் சொல்லாதே யுன்பேர்

143. பரமே சுரனென்பீர் பரவியவன் காதிற்
புரைதா னுமக்கீசற் புற்றோ? வுரையீர்

144. வரவட மான்செப மாலைவட மெல்லாங்
சரவட மல்லவென்று காய்கதிரோன் முன்னின்

145. றிருவிழியைத் தொட்டாணை யிட்டு விடும்போற்
திருநீற்று ரேகையன்ன செவ்வேளை யுங்க

---

135. சுதை-சுண்ணாம்பு; மதில்-சுவர்; திருமண்-வைணவர் அணிவது.
136. பரிபாடை-குழூஉக்குறி; பாடை-மொழி; அனுமன்-குரங்குக் கடவுள்; அனந்தாள்வான்-ஆதிசேடன்.
137. கருடன்-பருந்து; திருவடி-பாதம்; (கருடனுக்குப் பெரிய திருவடி அனுமனுக்குச் சிறிய திருவடி) என்பது வைணவ மரபு)
138. திருப்போனகம்-கடவுட்கு நிவேதித்த அமுது.
139. மின்னார்-அழகிய பெண்கள்; யோனி-பெண்குறி(அல்குல்)
140. திருமலை-திருப்பதி மலை, கைலை மலை; உந்⌒-கொப்பூழ்.
141. சரண்-அடைக்கலம்; அனந்தசயனம்-திருமாலின் ஆதிசேடனாகிய படுக்கை.
142. திருவேடகம்-சைவக்கோலம்.
143. பரமேசுவரன்-கடவுள்; புரை-உள்துளை.
144. வடம்-வயிறு; செபமாலை-பிரார்த்தனை மலர் மாலை; கரவடம்-வஞ்சகம்; காய்கதிரோன்-எரிக்கின்ற சூரியன்.
145. செவ்வேள்-முருகக்கடவுள்

146. ளரனெற்ற யேறிவிளை யாடும்படியோ பால்போ
னரைத்த கிழமா தரைக்கண் டாலு

147. முரலுமொரு சீலையு டுத்தியிருந் தாலும்
பிரதெக் கணம் வந்து பின்றொடர்ந்தா லல்லோ

148. வரமுற் றிடுமிலிங்க முத்திரைதான் வாய்க்குந்
தெரித்த மழையில்லாச் சேறுபோற் கோபஞ்

149. சரச்சரென வோடிவருந் தற்கரே தீயுங்
குருஉப்புகையுந் திட்டாந்தங் கூறுகையி னாலோ

150. வெரிச்சல் புகைச்ச லிரண்டுந் தவிரீர்
கிரக்கத்திற் கண்டதெல்லாங் கிண்டுகையி னாலோ?

151. குரைகுரைத்துக் கோழிபோற் கொத்திக் கொளுவீர்
கரகரக்கைத் தொண்டையிலே சுரத்திருக்க வெச்சிற்

152. குரலிற் கடபடத்தைக் கொண்டு திரிவீ
ரொருவர்க் கொருவ ருறவாய்ச் சிரித்தாற்

153. புரையேறிச் சாவீரோ பூருவத்திற் கீரிக்
கிரையிட்ட சோற்றை யெடுத்தெடுத் துண்டீரோ

154. சுரகற் பதரு வேந்தன் சோதிடங் கேட்கும்
பிரகற் பதிபோற் பிள்ளைநீர் தாமோ

155. வரருசிக்கு மெல்லாம் வந்தாலு முமைப்போற்
பரருசிக்கப் பேசப் படியாதே போனா

156. னுரகங் களீறா யுயர்கதிரோ னாதி
கிரகங் களுங்கள் கிரகங் களிலே

157. கரகங்கள் கும்பங்கள் கைக்குடங்க டோறு
மரவங்கள் போல வடைத்திருப்ப துண்டோ?

---

146. எற்ற-அடிக்க
147. முரல்-ஒலி; பிரதெக்கணம்-சுற்றிவருகை, வலம்வருகை
148. வரம்-கடவுளிடத்திற்பெறும் பேறு; இலிங்கம்-சிவலிங்கம்.
149. குருஉப்புகை-நிறமுள்ள புகை; திட்டாந்தம்-அனுமானம்
150. எரிச்சல்-பொறாமை; புகைச்சல்-மனப்புழுக்கம்; கிண்டுகை-கிளறுகை.
151. சுரசுரக்கை-உறுத்துகை; எச்சில்-வாய்உமிழ் நீர்.
152. குரல்-மொழி; கடபடம்-ஒலியால் மருட்டிப் பேசுகை.
153. புரையேறல்-உணவு சுவாசக்குழாயில் சென்று அடைத்துக் கொள்ளல்;பூருவம்-முன்காலம்; கீரி-கீரிப்பிள்ளை.
154. கற்பதரு-கற்பகமரம்; பிரகற்பதி-வியாழன், தேவகுரு
155. வரருசி-பாணினி வியாகரணத்துக்கு வார்த்திகம் செய்த முனிவர்; பரர்-பிறர்.
156. உரகம்-பாம்புக்கோள், இராகு-கேது; கதிரோன்-சூரியன்; கிரகங்கள்-கோள்கள்.
157. கரகம்-கமண்டலம்; கும்பம்-குடம்; அரவம்-பாம்பு.

158. வொருகோடி யெண்ணுக்கு ளொன்றுநான் சொன்ன
தருகேசந் தங்க மடையாள மாக

159. விருதாதுக் குள்ளமுமக் கெப்படிக்காண் சொல்லும்
விரியு மடியளக்க மேற்குங் கிழக்குந்

160. திரியநிழற் றேடியிடும் பிள்ளைகளோ விள்ளு
மிராசிகள் பன்னிரண்டு மென்றும் வருடக்

161. கிராச முதவுங் கிரகத்தர் வீடோ?
கரண திதிவார யோகங்க ணச்சேத்

162. திரமுமுங்கள் கைவிரலைத் தேடிக்கொண் டோடி
வருவதென்ன தென்றடவி வைப்பீரோ செப்பீர்.

163. நரமூல மத்தனையும் நாடியறிந் தாற்போற்
கரமூலத் தேசற்றே கைவைக்கு முன்னே

164. சிரமூலத் தேசிறிது நோயுண்டுன் மூல
முரமூல மாயுள்ளே யுண்டென்பீர் தன்மந்

165. திரிதா னுமைக்கண்டாற் றெண்ட னிடுவான்
பரிதான முந்தருவான் பாரமாம் பூடு

166. விரிதூ றுடனுனக்கு வெட்டும் பழியோ
தரியாது வேரை வெட்டிச் சாய்ப்பீர் சருகைத்

167. திரிதூளி யிட்டிடித்துத் தேனிற் குழப்பி
முருங்கையிலைப் பத்தியமாய் முப்பதுநாண் முன்னாட்

168. சிருங்கிருடிக் கிட்டமருத் தீ(டுமுத) வீய்ந்து
பிருங்கிருடி போலுடம்பைப் பேயாக்கு வீர்கை

---

158. அங்கம்-உடல்.

159. இருதாது-சுக்கிலம்,சோணிதம்.

160. இராசிகள் பன்னிரண்டு-மேடம்,இடபம், மிதுனம், கடகம், சிங்கம் கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம் என்னும் பன்னிரண்டு இராசிகள்.

161. திதி-திவசம்; வாரம்-கிழமை; யோகம்-பலன்;திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பன பஞ்சாங்கம் எனப்படும்.

162. நட்சத்திரம்-விண்மீன்.

163. நரமூலம்-நரம்பு நோய்; நாடி-நரம்புத் துடிப்பு.

164. சிரம்-தலை; உரம்-வலிமை-தன்மந்திரி-தன்வந்திரி.

165. தெண்டனிடுதல்-காலில் விழுந்து கும்பிடுதல்;பரிதானம்-லஞ்சம்.

166. விரிதூறு-புதர்; சருகு-உலர்ந்த இலை.

167. திருதூளி-அரைக்கும் ஒரு கருவி; பத்தியம் -மருந்துக்கு ஏற்ற உணவு.

168. சிருங்கிருடி-விடம் போக்கும் மருந்து; பிருங்கிருடி-சக்தியை வணங்காது சிவபிரானை வழிபட்ட ஒருமுனிவர்.

169. மருந்தெடுக்கு முன்னே வன்பாச மெடுத்துக்
கிரந்த முரைப்பதெல்லாங் கிட்டவந்து கேட்குந்

170. திருகுசின்னக் கூற்றுமக்குச் சீட்டாளோ (மோ)ட்டுக்
கருமேதி நும்மெருமைக் கன்றோ புகல்வீர்

171. நிரைநிரை யென்றவட்டி நேருலர்ந்து போவீர்
ஒருநிரையி லுண்டோ வுமக்குழக்குப் பால்கா

172. ணரையுருமுக் காலுருமு வென்றென்று நைவீ
ருருமுவரி லற்சுனப்பத் தோத வருமோ?

173. கருவிளங்காய் கூவிளங் காயென்று கரைவீர்.
ஒருவிளங்காய் விக்கி யுயிர்போனால் வருமோ?

174. வரிசனம் பூசி யடுத்ததம ரோடுங்
கரிமையிடுங் காரிகையைக் கைப்பிடித்து வந்தீர்

175. இருசீரு முன்சிரென்பீ ரித்தனைசீ ருக்கு
ளொருசீரா னாலுமக ளூர்க்கனுப்ப லாமோ?

176. மருவிய நன்னூன் மங்கலசூத்தி ரந்தான்
றரியாத போதே சமத்துமக்குப் போதா

177. துரிய வர்கவிதை யுண்டா திருகு
முருகாயிற் கால முழுதும் பிழைப்பீர்.

178. தருவதுபோற் பேசினுஞ்சிந் தாமணியே (கா)வே
சுரபியே யென்பீர்சும் மாவிருந்தாற் கல்லே

---

169. சிரந்தம்-நூல், வடமொழி.

170. கருமேதி-கறுப்பு எருமை.

171. நிரை-ஒழுங்கு; நேருலர்ந்து-நீதி இல்லாமல்; உழக்கு-முகத்தளவைக் கருவி.

172. உருமு-இடி; நைவீர்-வருந்துவிர்; அற்சுனப்பத்து-இடிதாக்காமலிருக்கச்சொல்வது; ஓதவருமோ-சொல்ல இயலுமோ?

173. கருவிளங்காய்-வில்வக்காய்; கூவிளம்-வில்வ கை, யாப்பருங்கலக் காரிகையின் வரும் அசை வாய்பாடுமாம்; ஒருவிளங்காய்-ஓர் உருண்டை.

174. அரிசனம்-மஞ்சள்; தமர்-சுற்றத்தார்; கரிமை-கறுப்பு மை; காரிகை-பெண்.

175. சீர்-செல்வம்,செய்யுளின் ஓர் உறுப்புமாம்.

176. நன்னூல்-நல்லசரடு பவணந்தி முனிவர் இயற்றிய இலக்கண நூல்; மங்கலசூத்திரம்-மங்கலவணி, தாலிக்கயிறு; சிறப்பு பொருந்தியநூற்பா எனலுமாம்; தரியாத-அணியாத; சமத்து-திறமை.

177. திருகு முருகு-மாறுபாடு; பிழைப்பீர்-பிழை செய்தவராவீர்.

178. சிந்தாமணி-விரும்பியதைக் கொடுக்கும் ஒரு வகைத் தெய்வ மணி; கா-கற்பக மரம்; சுரபி-காமதேனு.

179. மரமேமா டேயென்று வைதுகொண்டு போவீ
ரிரதமே வட்சார மிங்குலிகம் வங்கந்

180. துருசு நெறிவிடந் துத்த நிமிளை
பொரிகாரம் வெங்காரம் பொன்னம்பா நாக

181. மரிதாரந் தாளக மப்பிரக மெல்லாந்
திராவகங்க ளும்பச் சிலைச்சாறு மூற்றி

182. யிராவும் பகலு மிருந்தரைத்த கைகள்
வரராசையூர்ப் பெயரை வாய்திறந்து சொல்ல

183. கரராசி யம்மிகையிற் காட்டிக் கொடுக்க
வெருமுட்டை மீதுபுட மிட்டெரிக்கு முன்னே

184. யொருமுட்டை தண்ணீருக் குள்ளே மிதந்து
விரிமணலிற் சம்பா விதைவிதைத்து வைத்தோ

185. னரிய வரிவாளு மரிந்(தகிடை) கட்டப்
புரியுங் கொடுவருதல் போலவே மூத்த

186. மருமக ளுக்கு மகளுக்குந் தங்கச்
சரியுங் கடகமுந் தன்னுடைய வீட்டுப்

187. பெரியமனு டிக்கோர் பெரிய சவடி
யரமனையார் காதலிடு வாளடுத்த வீட்டு

188. மரமனையார் காதிலிட வண்டிற் கடுக்க
னிருகை வளையேன் றிடாப் பெழுதி வைப்பீ

